卐 ஸ்ரீ ஜிநாய நம : 卐

# குறட்பாவில் சமய சாரம்

பிராகிருத மூலம்:

ஆசாரியர் **குந்த குந்த தேவர்**

தமிழில்

திருவறப்பாவலர்

வங்காரம் **ஜெ. அப்பாண்டைராசன்**

பம்மல், சென்னை – 75.

**வெளியீடு:**

**நன்கொடையாளர்**

திருமிகு. **து.பூபாலன்** அவர்கள்

பொறியாளர் ஓய்வு

எண். 5, நான்காம் தெரு, S.R.P. காலனி,

ஜவகர் நகர், சென்னை – 82.

பதிப்பு :

**ஆதிபகவன் அறப்பணி மன்றம்**

அறநூற்பதிப்பு மையம்,

எண் : 4, டாக்டர் இராதா கிருஷ்ணன் தெரு,

வ.உ.சி. நகர், பம்மல், சென்னை – 600 075.

தொ.பே . 9444950705

## நூலின் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **குறட்பாவில் சமய சாரம்** |
| பாகத மூலம் | : | ஆசாரியர். ஸ்ரீ குந்தகுந்த தேவர் |
| குறட்பா வடிவமும் தெளிவுரையும் | : | வங்கை.ஜெ. அப்பாண்டைராசன் |
| உரிமை | : | நூல் ஆசிரியருக்கே |
| முதற் பதிப்புநாள் | : | நவம்பர் 2011 |
| வெளியீடு | : | ஆதிபகவன் அறப்பணி மன்றம் பம்மல், சென்னை – 600 075. |
| மன்ற வெளியீடு எண் | : | 30 |
| புத்தக அளவு | : | 14 X 21.5 செ.மீ |
| பக்கங்கள் | : | 124 |
| நூற்பொருள் | : | உயிரின் இயல்பு |
| அச்சிட்டோர் | : | கல்யாணி பிரிண்டர்ஸ், பல்லாவரம், சென்னை – 43. |
| நூல் கிடைக்குமிடம் | : | 1. திருமிகு. து.பூபாலன் அவர்கள் 5, நான்காம் தெரு, S.R.P. காலனி, சென்னை – 82. கைபேசி : 98494 48643<br>2. ஜெ, அப்பாண்டைராசன் எண்.4,டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரு, வ.உ.சி நகர், பம்மல், சென்னை – 75. கைபேசி : 9444950705 |
| விலை ருபாய் | : | அறுபது மட்டும். |




நூல் ஆசிரியர் படைப்பு எண் : 37

## பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | வாழ்த்துக்கவிமாலை | 4 |
| 2. | நன்கொடையாளர் உரை | 5 |
| 3. | முன்னுரை | 7 |
| 4. | உயிரும் உயிரல்லதும் (அதிகாரம் 1) | 8/9 |
| 5. | கர்த்தாவும் கருமமும் (அதிகாரம் 2) | 24/25 |
| 6. | பாவம், புண்ணியம் (அதிகாரம் 3) | 42/43 |
| 7. | வினை ஊற்று (அதிகாரம் 4) | 46/47 |
| 8. | வினைத் தடுப்பு (அதிகாரம் 5) | 50/51 |
| 9. | வினை உதிர்ப்பு (அதிகாரம் 6) | 52/53 |
| 10. | வினைக் கட்டு (அதிகாரம் 7) | 62/63 |
| 11. | வீடுபேறு (அதிகாரம் 8) | 70/71 |
| 12. | முழு தூய அறிவு (அதிகாரம் 9) | 74/75 |
| 13. | சமய சாரம் : பாகத மூலம் | 96 |

குறட்பாவில் சமய சாரம்

## வாழ்த்துக் கவிமாலை

திருவறக் கவிஞர் : கவிக்கோ.

காவியப்புலவர் திருமிகு. **தோ.ஜம்புகுமாரன்** அவர்கள்

1. எழுசீர் சமயசாரம் இன்சொல் குறட்பாப்
பழச்சாறு நல்லுயிர்ப் பாங்கு
2. சமயம்சேர் சாரமதைச் சாற்றும் குறட்பா
அமிழ்தினை ஆர்ந்தேன் இனிது
3. குந்தகுந்தர் இன்றிருப்பின் கொள்ளை மகிழ்வடைவார்
செந்தமிழ்நூல் சீர்மை அறிந்து.
4. தத்துவம் போற்றிடும் அற்புதப் பாக்களின்
வித்தகம் கண்டேன் வியந்து
5. கோதில்லாத் தத்துவங்கள் கூறுகின்ற இந்நூலை
ஓதுவார் உய்வார் விரைந்து
6. பேச்சில் வெளிப்படும் பீடுநடை போலெழுத்து
வீச்சும் இவர்க்கே உரித்து
7. ஒப்பா ரிலாக்கவி வாணருள் ஏறென்போம்
அப்பாண்டை யாரை உவந்து
8. சிந்தனையில் தேற்றமும் செப்புவதில் ஓர்மிடுக்கும்
வந்துறையும் வாமன் இவர்
9. அரும்பெரும் சாதனை ஆற்றும் திருவறப்
பாவலர் வாழ்கபல் லாண்டு.
10. வாழி ! இவர்தமிழ்நூல் வாழ்க! திருத்தொண்டு
வாழ்கவே! என்றும் புகழ்!

அன்புடன்

புழல்

20.9.2011

**தோ. ஜம்புகுமாரன்**



## நன்கொடையாளர் உரை :

அனாதிகாலக் கர்மக் கட்டின் காரணமாக உயிர் நாற்கதிச் சுழற்சியில் சிக்கித் தவிக்கிறது. முற்பிறவிகளில் செய்த நல்வினைகளின் உதயத்தால் , நற்குலத்தில் மனிதப் பிறவியும் சமண அறத்தின் தொடர்பும் கிட்டியுள்ளது. அந்த அரிய வாய்ப்பை நல்லமுறையில் பயன்கொண்டு நம் உயிர் முக்தி நோக்கிச் செல்லும் வகையில் முழு முயற்சியுடன் செயல்பட வேண்டும். இந்த முயற்சியில் வெற்றி கிட்ட உண்மையான ஆன்மீக அறிவைப் பெறுவதும் அதன் வழி நடப்பதும் அவசியமாகும். நாம் வாழும் இந்த ஐந்தாம் காலத்தில் (தீக்காலம்) இந்த மெய்யறிவைப் பெற தீர்த்தங்கரரோ, சமவ சரணமோ இல்லை. தீர்த்தங்கரர்களால் அருளப்பட்ட இவ்வறிவு “சமய சாரம்” “பிரவசன சாரம்”, “பஞ்சாஸ்திகாயம்” போன்ற அத்யாத்ம நூல்களில் புதைந்து கிடக்கின்றன. இந் நூல்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் திருக்குறளை எழுதிய ஆசாரியர் குந்த குந்தரால் பிராக்கிருத மொழியில் எழுதப்பட்டவை. சமய சாரம் உயிரைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கும் நூலாகும். இந்நூல் கூறும் கருத்துகளைக் கலக்கமின்றி தெரிந்துகொள்ள நயத்தைப் பற்றிய அறிவு அவசியமாகும். ஆகையால் இந் நூலுக்கு சமஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் தெளிவுரைகள் ஆசார்யர்களால் எழுதப்பட்டுள்ளன.

எனக்குத் தெரிந்து அளவில் தமிழ்ச் சமணர்களின் புண்ணிய உதயத்தால் 1936ல் வீடூர் திரு. A. தர்மசாம்ராஜ்யம் சாஸ்திரியார் சமய சாரத்தின் சாரமாக வடமொழிகலந்த தமிழில் உரைநடையில் ‘சமயசாரம்’ என்ற நூலை வெளியிட்டுள்ளார்கள். பின்னர் 1944ல் பேராசிரியர். சக்கரவர்த்தி நயினார் அவர்கள் (1880 – 1960) அமிர்தசந்திர ஆசாரியரால் அருளப்பட்ட சமஸ்கிருத தெளிவுரை நூலை அடிப்படையாகக் கொண்டு ‘சமயசாரம்’ (Samaya Saram) என்ற நூலை ஆங்கில மொழி பெயர்ப்புடன் மிக விளக்கமான விரிவான உரையுடன் எழுதி வெளியிட்டுள்ளார்கள். மேலும் நம் அதிஷ்ட வசமாக 2005ல் ஸ்ரீ சுருத கேவலி பத்ரபாகு சுவாமி சேவாதளத்தால் பதவுரை, கருத்துரை மற்றும் விளக்கவுரையுடன் ‘சமய பாகுடம் எனும் சமய சாரம்’ என்ற நூல் வெளிவந்துள்ளது.

என் புண்ணிய உதயத்தால் இம்மூன்று நூல்களையும் சுவாத்யாயம்

செய்யும் பாக்கியம் (லப்தி) எனக்குக் கிட்டியது. சுவாத்யாயம் செய்தவற்றில் மேலும் தெளிவும் உறுதியும் பெற ' உயிரின் இயல்பு' என்ற பெயரில் எனக்குத் தெரிந்த தமிழில் தொகுத்து என் மகனின் திருமணத்தின் போது (2009) வெளியிட்டுள்ளேன்.

கால லப்தியின் காரணமாகவும், என் புண்ணிய உதயத்தின் காரணமாகவும், இந்த ஆண்டு சென்னை கொளத்தூர் ஸ்ரீ விஜய பார்ஸ்வநாதர் ஜிநாலயத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது வங்காரம் புலவர் திரு. ஜெ. அப்பாண்டைராசன் அவர்கள் தமது சொற்பொழிவில் ' குறட்பாவில் சமயசாரம்' எழுதிக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அப்போது அவரைச் சந்தித்து இந்நூல் வெளியீட்டுச் செலவு முழுவதையும் நானே ஏற்பதாகக் கூறினேன். என்னுடைய 60 ஆம் வயதில் 'குறட்பாவில் சமயசாரம்' என்ற இந்த அரியநூலை வெளியிடும் பாக்கியம் பெற்றது எனக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. இந்நூலில் உயிரின் இயல்பை விரித்துரைக்கும் அரிய கருத்துக்களை எளிமையான தமிழில் குறட்பாவடிவில் அமைத்து அதற்குக் கருத்துரையும் படைத்திருக்கின்றார், திருவறப்பாவலர் திரு. வங்காரம். ஜெ. அப்பாண்டைராசன் அவர்கள். அன்னாருக்கு என் குடும்பத்தாரின் அன்பு கலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ச் சமண சமூகமும், மற்றும் தமிழ் தெரிந்த அற ஆர்வலர்களும் உயிரைப் பற்றிய மயக்கம் தெளிந்து நல்லறிவு பெற இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது உறுதி. பவ்யர்கள் அனைவரும் இந்நூலை நல்ல முறையில் பயன்கொண்டு உயிர் பற்றிய தெளிவடைந்து அறநெறியில் பீடுநடை போட வேண்டும் என்று விழைகின்றேன் : வேண்டுகின்றேன். நன்றி : வணக்கம்.

வளர்க திருவறம் !

மஹாவீரர் பரிநிர்வாணத்திருநாள்
26.10.2011
சென்னை
போன் : 98494 48643

அன்புடன்
து. பூபாலன்



## முன்னுரை

ஆசாரியர் குந்த குந்த தேவர் சமண மெய்யியலை விளக்கும் பல அரிய நூல்களை இயற்றியருளியுள்ளார்கள். இவர் 84 பாகுடங்களைப் பாகத மொழியில் இயற்றியுள்ளார் என்றபோதும், நமக்குச் சில நூல்களே கிடைத்துள்ளன. அவற்றுள் சமய சாரம், பிரவசன சாரம், பஞ்சாஸ்திகாயம், நியமசாரம், பாரஸ அனுவேக்கா முதலானவை மிகவும் போற்றப்படுவன வாகும். இவரே தமிழில் திருக்குறளை எழுதியர் என்பது சமண அறிஞர்களின் கருத்தாகும்.

நான் ஏற்கனவே பஞ்சாஸ்திகாயத்தை வெண்பா வடிவில், பைந்தமிழில் ஐந்தத்திகாயம் என்ற பெயரில் எழுதி வெளியிட்டுள்ளேன். பாரஸ அனுவேக்காவை, பன்னிரு சிந்தனைகள் என்ற பெயரில் விருத்தப் பாக்கள் வடிவில் தெளிவுரையுடன் எழுதி வெளியிட்டுள்ளேன். சமய சார சன்மார்க்கம் என்னும் தமிழ் உரைநடை நூலையும் எழுதி வெளியிட்டுள்ளேன். சமயம் என்றால் உயிர் என்றே பொருள்.

குந்தகுந்த தேவர் அருளிய இந்நூலில் 9 அதிகாரங்களில் 415 காதைகள் உள்ளன. 415 காதைகளையும் அவற்றின் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறட்பாக்களாக ஆக்கியுள்ளேன். பிழைகள் இருப்பின் பொறுத்திட வேண்டுகிறேன்.

இந்நூலின் சிறப்புணர்ந்த நல்லற ஆர்வலர், சென்னை, ஜவகர் நகர், திருமிகு. து. பூபாலன் அவர்கள் நூற்பதிப்புச் செலவு முழுவதையும் தாமே முன்வந்து பெருமகிழ்வுடன் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். ''உயிரின் இயல்பு'' என்ற பெயரில் சமய சாரத்தின் உரைநடைத் தொகுப்பை தம் குமாரரின் திருமண விழா அன்பளிப்பாக வணக்கத்திற்குரிய முனிமகராஜ் ஸ்ரீ ஆர்ஜுவ சாகர் பெருமானின் நல்லாசியுடன் வெளியிட்டச் சிறப்பு இவர்க்குண்டு. திருவறம் போற்றிடும் அப்பெருமகனாருக்கு என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக !

உயிரின் இயல்பை நிச்சய நோக்கில் விளக்கும் இப்புனித நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள பேரன்பிற்குரிய பெரும்புலவர் திருவறக்கவிஞர் திருமிகு. தோ. ஜம்புகுமாரன் அவர்களுக்கும், நூலை நன்கு அச்சிட்டுத் தந்த பல்லாவரம், கல்யாணி பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும், நூல் வெளிவர உதவிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் என் நன்றி உரித்தாகுக! வாழிய நல்லறம் !

உயிர் இயல்பு உணர்வோம் !
உன்னத விடுதலை பெறுவோம் !

பம்மல்
23.09.2011

அன்பன்
ஜெ. அப்பாண்டைராசன்
நூலாசிரியர்

## முதல் அதிகாரம்
## உயிரும் உயிரல்லதும்

1. ஒப்பற்ற, சலனமற்ற, பேரின்பத்தில் நிலைபெற்ற அனைத்து சித்தர்களையும் வணங்கி, நூல் உணர்ந்தோரால் அருளப்பட்ட கருத்துகளின் தொகுப்பான “ சமய சாரம்” என்னும் இந்நூலை எழுதுகின்றேன்.

2. எவ்வுயிர், நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகியவற்றில் நிலைத்துள்ளதோ, அவ்வுயிர் தன் இயல்பு நிலையில் உள்ளது. எவ்வுயிர், புற்கலப் பொருளாகிய வினைகட்குத் தன்னிடத்தில் இடம் அளித்துள்ளதோ, அவ்வுயிர், திரிபு நிலையில் உள்ளது.

3. உயிராயினும் அல்லது எப்பொருளாயினும் தனித்துள்ள நிலையில், அதன் இயல்புக்கேற்ற அழகுடன் விளங்குகிறது. பிறவற்றோடு கூட்டுநிலை உருவானால், அவ்வுயிர் அல்லது அப்பொருள் தன் அழகில் இருந்து முரண்படுகிறது.

4. பிறவியில் உழலும் எல்லா உயிர்களும், காமம் சார்ந்த, பல்வேறு வகையான இன்பங்கள் சார்ந்த, செயல்பாடுகளில் கட்டுறுகின்றன. ஆனால் ஓர் உயிர் தன்னுடைய தூய்மை நிலையை அடைதல் என்பது எளிதாக இல்லை.

5. தன்நிலையில் திரிபு அடையாமல், ஒருமையில் தூய்மையாக உள்ள உயிரின் சிறப்பை, யான் விளக்க முனைகின்றேன். ஏற்புடையதென்றால், ஏற்றுக்கொள்ளுங்கள்: பிழை உடையதென்றால் விலக்கிவிடுங்கள்

6. எவர் ஒருவர் தன் உயிரின் தூய இயல்பினைத் தானே முற்றும் உணர்கின்றாரோ, அவரிடம் விழிப்புடைமை, விழிப்பின்மை ஆகிய இரு நிலைகளுமே காணப்படாது.

7. உலக வழக்கில் நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியவை கூறப்பட்டாலும், உண்மை நோக்கில் கூறுங்கால், தூய ஆன்மாவில் இம்மூன்றும் ஒருங்கிணைந்த பேரறிவு நிலையே காணப்படும்.



## முதல் அதிகாரம்
## உயிரும் உயிரல்லதும்

**1. ஒப்பிலாச்சித் தர்சலன மில்நிலையின் பர்போற்றி**
**செப்புவேன் நூலறிவர் சொல்.**

**2. மும்மணி தன்னில் நிலைத்தலே ஓருயிர்**
**தம்இயல்பாம் மற்றே திரிபு**

**3. உயிரும் பிறவும் தனித்தே அழகாம்**
**அயலார் தொடர்பே முரண்**

**4. காமமும் பற்றும் உயிரைத்தான் கட்டிடும்**
**ஏமம் அடைதல் அரிது**

**5. உரைக்கின்றேன் தூய உயிரின் இயல்பை**
**அறிக விடுக பிழை**

**6. விழிப்பு விழிப்பின்மை யில்லை உயிர்தான்**
**முழுத்தூய்மை நின்றிட்ட போது**

**7. மும்மணி என்ப வழக்கில்தான் அம்மூன்றும்**
**தானுடைத்தே ஞான உயிர்**

8. தானாகப் புரிந்து கொள்ளும் தன்மையற்றவனுக்கு, அவன் அறிந்த மொழியாலன்றிப் பிறமொழிகளால் கருத்தை விளக்க முடியாது. அது போன்றே, உலக வழக்கை அடிப்படையாகக் கொள்ளாமல் (வியவகார நயம் இல்லாமல்) உண்மைத் தன்மையை உணர்த்த முடியாது.

9. நூல்களை நன்குணர்ந்தவர், தன் ஆன்ம இயல்பை உணர்ந்தவர் ஆகின்றார். எனவே உண்மை நோக்கில் அவர் சுருத கேவலி எனக் கருதப்படுவார்.

10. நூல்களைக் கற்றவர், உலக வழக்கிலும் சுருத ஞானி யென்றே கருதப்படுவர்.

11. உலக வழக்கில் கூறப்படும் கருத்து, பொருளின் உண்மை நிலையை உரைப்பதாகாது. எனவே உண்மைநய நோக்கில் கூறப்படும் கருத்தை ஏற்பதே நற்காட்சியாகும்.

12. தூய உயிரின் இயல்பை உண்மை நயத்தால் உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர இயலாதோர் ( அத்தகுதியைப் பெறும் வரை) உலக வழக்கை அறிதல் வேண்டும்.

13. உண்மை நயத்தால், உயிர், உயிரல்லவை, புண்ணியம், பாவம், ஊற்று, கட்டு, செறிப்பு, உதிர்ப்பு, வீடு ஆகிய ஒன்பது பதார்த்தங்களை அறிதலே நற்காட்சியாகும்.

14. பிறபொருள் கலப்பில்லாதது : வேறொன்றாக மாறாதது : ஏற்ற, இறக்க மாற்றங்கள் இல்லாதது : தனித்தன்மையுடையது : நிறம் முதலான வடிவமைப்பு இல்லாதது : இத்தகைய இயல்புகளை உடையதே உயிர் என்பது உண்மை நய நோக்காகும்.

15. எவர் தன்னை (தன் உயிரை) முழுமையாக அறிகின்றாரோ, அவர், நூலறிவராகவும் ஆகின்றார்.

16. உலக வழக்குநோக்கில், மெய்யுணர்வுபெற்ற தன்முயற்சியாளர், நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகியவற்றை ஏற்க வேண்டும் என்று கூறப்படும். உண்மை நய நோக்கில் இம்மூன்றும் இணைந்ததே உயிர் என்று கருதப்படும்.



**8. உலகியலை முன்வைக்கா துண்மை யியலை**
**விளக்குதல் யார்க்கும் அரிது**

**9. நன்னூல் துணைகொண்டே தன்னுயிர் தானறிவர்**
**பன்னூல் அறிவர்என் பார்.**

**10. பன்னூல்கற் றோர்தமை நல்லறிவர் என்றே**
**பகர்வர் உலகோர் உவந்து**

**11. உலக வழக்குண்மை யாகாதே உண்மை**
**நலமென்ப நற்காட்சி யாம்**

**12. உண்மை நயத்தால் அறிக உயிரையத்**
**தன்மை வரையுலக நோக்கு**

**13. நற்காட்சி என்ப உயிர்முதலாய் ஒன்பதாம்**
**நற்பொருள் தேர்தலே யாம்**

**14. மாறாத் தனித்தன்மைத் தாம்உயிர் எஞ்ஞான்றும்**
**வேறே கலப்பின்மை யால்**

**15. அறிவர் முழுமையாய்த் தன்னை அறிவார்**
**அவர்நூ லறிவரு மாம்.**

**16. மும்மணி ஏற்றல் வழக்குநயம் உண்மையில்**
**மும்மணி யேதான் உயிர்**

17. பொருள் வேண்டும் எனக்கருதும் இரவலன் கொடுக்கும் இயல்புடைய மன்னரிடம் சென்று, பணிந்து, வேண்டுதல் செய்வான்.

18. அதுபோலவே, வீடுபேறு வேண்டும் ஒருவன் தன் உயிரின் இயல்பை உணர்ந்து, அவ்வுயிர், தன் இயல்பில் நிற்க முயற்சி செய்தல் வேண்டும்.

19. உயிர், உண்மை நய நோக்கில், தன் செயலுக்குத் தானே கர்த்தா ஆகின்றது. வழக்கு நய நோக்கில் அவ்வுயிரே புத்கலவினைகளைச் செய்வதாகவும் கூறப்படுகின்றது.

20. உயிர், தன்னினும் வேறான பொருள்களான மனைவி, அல்லது கணவன் மக்கள், பொன், வீடு, ஊர், நாடு முதலானவற்றைத் தன்னுடைய பொருள்களாகக் கருதுகின்றது.

21. பிற பொருட்கள், முன்பே என்னுடையனவாக இருந்தன. இப்பொழுதும் என்னுடையனவாக இருக்கின்றன. நானே அவற்றின் உரிமையாளன் ஆவேன் என்று உயிர் தவறாகக் கருதுகின்றது.

22. இவ்வாறு, உண்மைக்குப் புறம்பானவற்றை எண்ணிக் கொண்டிருப்பவன் முழு மூடன் ஆவான். பொருட்களின் மெய்யான தன்மையை அறிபவனே அறிவுடையவன் ஆவான்.

23. அறியாமையில் மயங்கிய உயிர், தன்னுடன் தொடர்புள்ள உடல், பொன், பொருள் முதலான புத்கலப்பொருட்களைத் தன்னுடையவை என்று கருதுகின்றது. அதனால் கடும் விருப்பு, வெறுப்புகளை உடையதாகின்றது.

24. உயிர் எப்பொழுதும் அறிவுப் பண்பினை உடையதாகும். அப்படியானால் அது ஏன் புற்கலப் பொருட்களின் இயல்பினை உடையதாகின்றது? அது ஏன் புறப்பொருளைத் தன்னுடையவை என்று கருதுகின்றது?

25. உயிர், புற்கலப்பொருட்களின் இயல்பை உடையதாக மாறாது. அவ்வாறு மாறுமேயானால், உயிரல்லாத புற்கலப் பொருள்களும் உயிருடையனவாக மாறக்கூடும் அல்லவா? அந்நிலையில் புற்கலப் பொருள்களும், பிறபொருள்களைத் தம்முடையவை என்று கூறக்கூடும் அல்லவா?



**17. பொருள்வேண்டும் என்பான் ஒருவன் வேண்டிப்**
**பொருள்கேட்பான் வேந்தனிடம் சென்று**

**18. வீடுவேண்டும் என்பான் ஒருவன் உயிர்தன்னின்**
**பீடுணர்ந்தே நிற்றல் கடன்**

**19. காரணன் உண்மையில் தானே வழக்கினில்**
**கூறுவர் குற்றம் வினை**

**20. தன்னினும் வேறாம் உறவுகள் தன்னுடைத்தாய்**
**எண்ணல் உயிரின் மயக்கு**

**21. பொருளெலாம் என்னுடைமை யானே உரியோன்**
**எனப்பிழைபாய் எண்ணும் உயிர்**

**22. பிழையாய்க் கருதிடும் பேதை உயிர்தான்**
**முழுமை உணர்தல் அறிவு**

**23. அறிவில் தெளிவின்மை புத்கலப் பற்று**
**விருப்பு வெறுப்புக்கே வித்து**

**24. அறிவே உயிரின் தனிப்பண்பாம் என்னின்**
**புறப்பற்று தோன்றுதல் ஏன்?**

**25. உயிர்தான் புத்கலமாய் மாறாதே அஃதும்**
**உயிராயின் உண்டாமே பற்று**

26. உயிரும் உடலும் ஒன்றாகவே காணப்படுகிறது. அப்படியிருக்க உயிரும் உடலும் ஒன்றல்ல என்று கூறினால், தீர்த்தங்கரர்களையும், ஆசாரியர்களையும் சர்வ சாதுக்களையும் குறித்துப் பாடப்படும் துதிகள் எல்லாமே பொய்யாகி விடாதா? எனவே உயிரும் உடலும் ஒன்றே என்று கருதுகிறான் அறிவிலி.

27. உலகவழக்கில் உயிரும் உடலும் ஒன்றே எனக் காணப்படுகின்றது. ஆனால் இவ்விரண்டும் எப்போதுமே தனித்தனித்தன்மையானவை என்று உண்மை நோக்கில் கருதப்படும்.

> “ ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்
> வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர்” (நன்னூல் 49)

28. உயிரிலிருந்து வேறுபட்ட உடலை (உடலின் நிறம் முதலானவற்றைக் கூறி)த் துதி செய்யும் முனிவர், தான் கேவலி பகவானைத் துதி செய்தேன் என்று கூறுகின்றார் ( இது பொருந்துமா?)

29. அத்தகையத் துதி, உண்மையில் துதி ஆகாது; ஏன்எனில் உடலின் குணம் கேவலி பகவானின் குணம் அல்ல. கேவலி பகவானின் குணத்தை எத்துதிக் குறிப்பிடுமோ அத்துதியே, உண்மையான துதியாகும்.

30. ஒரு நாட்டின் தலை நகரத்தை வருணனை செய்வது, அந்நாட்டின் அரசனைப் பற்றிய வருணனையாகாது. அதுபோன்றே, உடல் வருணனை, பகவானின் குணத்தைக் குறிப்பதாகாது.

31. நல்லறிவின் துணை கொண்டு, யார் ஒருவர் தம் ஐம்பொறிகளை வென்றாரோ, அவரே தன் ஆன்ம இயல்பை உணர்ந்தவர் ஆவார் என்பதே சாதுவர் கூறும் உண்மை நய நோக்கு.

32. நல்லறிவின் துணை கொண்டு, யார் ஒருவர் மயக்கத்தை வென்றாரோ, அவரே தன் ஆன்ம இயல்பை உணர்ந்தவர் ஆவார் என்பதே உண்மை நய நோக்கு.

33. நல்லறிவின் துணை கொண்டு, யார் ஒருவர் மோக உணர்வை வென்றாரோ, அவரே, அத்துறவியே, தன் உயிரின் இயல்பை, உணர்ந்தவர் ஆவார் என்று கணதரர் அருளியுள்ளார்.



**26.** **உயிருடல் வேறெனின் தீர்த்தன் துதியும்**
**தவறன்றோ என்பான்மூ டன்**

**27.** **உலகியலில் ஒன்றாம் உயிருடல் உண்மை**
**நிலையியலில் வேறுவே றாம்**

**28.** **உயிரதன் வேறாம் உடல்வணங்கும் சாது**
**மயக்கு பொருந்துமோ காண்**

**29.** **உடலை வணங்குதல் வீணே கடவுள்**
**குணத்தை நினைத்தல் துதி**

**30.** **திருநகர் சுட்டுமோ வேந்தனின் செங்கோல்**
**திருமேனி ஆமோ குணம்**

**31.** **நல்லறிவால் ஐம்பொறி வென்றாரை வென்றவராய்ச்**
**சொல்லுவர் சாதுவர் தாம்**

**32.** **நல்லறிவால் பொய்மயக்கு வென்றாரே தன்னுயிர்**
**நல்லியல்பு தாம்கண்டார் நன்கு**

**33.** **நல்லறிவால் மோகமதை வென்றாரே தன்னுயிர்**
**நல்லியல்பு தாம்கண்டார் நன்கு**

34. தன் அனுபவ அறிவால், எவ்வுயிர் தன்னினும் வேறுபட்ட புறப்பொருள்களை அறிந்து விலக்குகின்றதோ, அவ்வுயிரே, உண்மையில் தூய உயிராகும்.

35. உலகில் நல்ல மனிதன், பிறருடைய பொருட்களை தனதல்ல வென்று கருதி விலக்கி விடுகின்றான். அதுபோன்றே நல்லறிவு உடையவர் என்போர், தன் உயிருக்குப் புறம்பான உணர்வுகளை நீக்கிவிடுவர்.

36. மோகம் என்பது என்னுடையது அல்ல : ( அது என் உயிரின் இயல்புக்கு புறம்பானது) நான் நல்லறிவன் மட்டுமே : (நல்லுபயோகமே என் இயல்பு) நான் செருக்கில்லாதவன் என்று கருதுபவனே அறிவன் ஆவான்.

37. உலகின் பிற பொருள்களான தன்மம், அதன்மம், ஆகாயம், காலம், புத்கலம் ஆகிய பொருட்கள் உயிராகிய என்னிடமிருந்து வேறுபட்டவை. நானும் அவற்றிலிருந்து முற்றிலும் வேறு பட்டவன் என்று உணரும் அறிவனே, நூலறிவு பெற்றவன் ஆவான் ( இங்கு கூறப்பட்டவை ஐந்தும் உயிரற்றவை)

38. நான் தனியானவன் : நான் தூய்மையானவன் : நான் காட்சியும் அறிவுமாகிய வடிவினன். நான் உருவம் அற்றவன் : பிற பொருள்களில் ஓர் அணு அளவும் என்னுடையதல்ல என்று உணர்பவனே அறிவன் ஆவான்.

39. வெறுப்பு, முதலான திரிபு உணர்வுகளை உயிரின் குணங்களாகக் கூறுவதும் புற்கலப்பொருள்களாகிய வினைகளை உயிர் என்று கருதுவதும் பிழையாகும்.

40. விருப்பு, வெறுப்பு, உடல் சார்ந்த வினைகள் முதலானவை உயிரின் குணங்களாகா.

41. வினை உதயம், வினை மந்தம், வினைப்பயன் முதலானவற்றை உயிர் என்று எண்ணுதல் தவறு.

42. வினையும் உயிரும் சேர்ந்ததே ஆன்மா என்னும் கருத்தும் தவறானது.

43. அவ்விதம் பலரும் கூறுகின்ற கருத்து உண்மைக்கு மாறானதாகும்.



**34.** **எவ்வுயிர் தன்னின் புறம்கண்டு போக்குமோ**
**அவ்வுயிரே தூய உயிர்**

**35.** **உரிமையில் ஓர்பொருள் வேண்டார்போல் தூயர்**
**விருப்புவெறுப் பேதுறப் பர்**

**36.** **மோகம் இயல்பல்ல யான்அறிவன் நல்லுப**
**யோகமே என்ப அறிவு**

**37.** **தன்மம் முதலாம் பொருளைந்தும் வேறென்றே**
**தன்னுயிர் ஓர்தல் அறிவு**

**38.** **தூயன் தனியன் உருவிலன் மும்மணியன்**
**தோயன்மற் றென்பான் உயிர்**

**39.** **விருப்பு வெறுப்பே உயிரின் பிறிதாம்**
**திரிபே வினைகளின் ஊற்று**

**40.** **விருப்பு வெறுப்பு குறுவினை யாகா**
**சிறப்புயிர் என்றே உணர்**

**(குறுவினை - நோகர்மம்)**

**41.** **வினைஉதயம் மந்தம் வினைப்பயன் ஆகா**
**இனிய உயிரென்றே காண்**

**42.** **வினையும் உயிரும் இணைந்ததே ஆன்மா**
**எனும்மொழி தான்பிழையே யாம்**

**43.** **பலரும் தவறாகக் கூறும் கருத்து**
**நிலையான உண்மை மறைப்பு**

44. விருப்பு, வெறுப்பு முதலான உணர்வுகள், புற்கலப் பொருள்களின் கலப்பினால் தோன்றியவையாகும் என்று முழுதுணர் ஞானியான அருகன் அருளியுள்ளார். எனவே அவற்றை உயிர் என்று கூற முடியாது.

45. வினைகள் எட்டு வகைப்படும் என்று ஜின பகவான் கூறியுள்ளார். அவ்வினைகள் உயிரோடு கலந்து, உரிய காலத்தில் பயனைத் தருவதால், இன்பமும், துன்பமும் தோன்றுகின்றன.

46. விருப்பு, வெறுப்பு முதலான உணர்வுகள் உயிரினுடையவை என்றும், ஜினபகவான் அருளியுள்ளார் என்பதும் உண்மைதான். அது வழக்கு நயத்தில் கூறப்பட்டதாகும்.

47. நாற்படைகள் சூழ அரசர் செல்லும்போது, “அரசர் போகின்றார்” என்பர் உலகோர், படைகளைக் குறிப்பிடாமல், அரசருக்கு முக்கியத்துவம் தரப்படுவது உலகியல் வழக்கு.

48. அதுபோன்றே விருப்பு, வெறுப்பு முதலான தன் இயல்புக்கு மாறுபட்ட உணர்வுகளில் உயிர், உழலும்போது, அவ்வுணர்வுகளைக் குறிப்பிடாமல், உயிரைக் குறிப்பிடுதல் உலக வழக்காகும்.

49. உயிர் சுவையற்றது : உருவம் அற்றது : மணம் அற்றது : கண்களுக்குப் புலப்படாதது : ஒலி அற்றது : அடையாளங்களாலும் அறிய முடியாதது! : குறிப்பிட்ட வடிவம் இல்லாதது: ஆனால் அறிதல் பண்புடையது, (அறிதல் தவிர்த்த பிறயாவும் புற்கலத்தின் குணங்களாகும் என்பது உணர்த்தப்பட்டது)

50. உயிர் நிறம் அற்றது: ஊறும் அற்றது : உடலும் அற்றது : உடற் கட்டமைப்பு அற்றது : மாறுபாடில்லாப் பயன்பாடு என்னும் சிறப்பினை உடையது.

51. தூய உயிருக்கு விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை : மோகம் இல்லை : வினைகளும் இல்லை : உடல் சார்ந்த அமைப்பிற்கான வினைகளும் (நோகருமம்) இல்லை.

52. தூய உயிருக்கு புற்கலப் பொருட்களான, பரமாணுக்களின் தொகுப்புக் கூட்டும் இல்லை : வினைக்கலப்பும் இல்லை. எனவே வினைத் துய்ப்பும் இல்லை .



**44. புத்கலச் சேர்க்கை விருப்பும் வெறுப்பும்தான்**
**உத்த மவுயிராகா தே!**

**45. எட்டு வகைவினைகள் புத்கலமென் றார்பகவன்**
**முட்டும் பெருந்துயர் வித்து**

**46. திரிபாம் உணர்வும் உயிரென அத்தன்**
**உரைத்தார் உலகியல் நோக்கு**

**47. வேந்தன் விரைகின்றான் என்பர் படைநான்கும்**
**மாந்தர் மறந்த நிலை**

**48. இயல்பில் முரணாம் திரிபுகளைச் சொல்வார்**
**உயிரென்றே பொய்மை மயக்கு**

**49. உயிர்தான் உருவம் சுவைமண மின்றி**
**வயங்கிய ஞானம் உடைத்து**

**50. உயிர்தான் நிறமுடல் ஊறிலது மாறாப்**
**பயன்பாடுப் பேறும் உடைத்து**

**51. உயிர்தான் விருப்பு வெறுப்பிலது வாட்டும்**
**செயிர்வினை கள்தாம் இல**

**52. தூய உயிர்க்கே வினைதொகுப் பில்லைநோய்**
**மேவும் கலப்பு மிலை**

53. தூய உயிருக்கு யோகஸ்தானமும் இல்லை : பந்த ஸ்தானமும் இல்லை : உதயஸ்தானமும் இல்லை : மார்க்கணா ஸ்தானமும் இல்லை.

( யோகம் என்பது மனம், மொழி, உடல் செயல்பாடுகளால் உயிரில் ஏற்படும் அசைவுகளைக் குறிக்கும். பந்தம், உதயம் மார்க்கணா ஆகியவை வினை சார்ந்த நிகழ்வுகளாகும்.)

54. தூய உயிருக்கு ஸ்திதி பந்தஸ்தானம், ஸங்க்லேச ஸ்தானம், விசுத்த ஸ்தானம் ஸம்யம லப்தி ஸ்தானம் ஆகியவையும் இல்லை.

ஸ்திதி பந்தம் – வினைகள் உயிரில் தங்கி நிற்றல்நிலை
ஸ்ங்க்லேசம் – பாவவினை உண்டாகக் காரணமாகும் உணர்வுகள்
விசுத்தி – புண்ணிய வினை உண்டாகக் காரணமாகும் உணர்வுகள்
ஸம்யம லப்தி – சாரித்திர மோகனிய வினை விலகும் நிலை.

55. தூய உயிருக்கு ஜீவஸ்தானமும் இல்லை. குணஸ்தானமும் இல்லை. ஏன் எனில் இவை புற்கலப் பொருளினால் உண்டாகும் நிகழ்வுகளாகும். ( ஜீவஸ்தானம் என்பது உயிரில் உண்டாகும் நிகழ்வு நிலை வேறுபாடுகளைக் குறிக்கும். குணஸ்தானம் என்பது குணநிலைகளின் படிப்படியான உயர்வு நிலைகளைக் குறிக்கும். இவை பிறவி உயிரின் மீது ஏற்றிச் சொல்லப்படும் நிலைகளாகும். தூய உயிரில் இத்தகைய நிலைகள் இல்லை.)

56. முன்குறித்த நிறம் முதற்கொண்டு குணஸ்தானம் வரையிலான நிலைகள், வழக்கு நயத்தால் உயிரின் குணங்களாக, உயிர் ஏற்கும் குணங்களாக கூறப்படுகின்றது. உண்மை நோக்கில் அவை எதுவும் உயிரின் குணங்கள் ஆகா.

57. பாலும் நீரும் ஒன்றாகக் கலப்பது போன்றே உயிர்தங்கிய உடலில், நிறம் முதலான குணங்கள் கலந்துள்ளன. ஆயினும் அத்தகயக் குணங்கள் உயிரினுடையதல்ல. உயிர் தனக்கே உரிய அறிவுப் பயன்பாடு என்ற குணத்தால், அவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

58. ஒரு பாதையில் வழிப்போக்கன் செல்லும் போது, திருடர்கள் அவன் பொருளைக் கவர்ந்து சென்றால், மக்கள், அச்சாலையைத் “திருட்டு வழி” என்று கூறுவர். இது உலகவழக்கு; உண்மையில் வழி திருடுவதில்லையல்லவா?



**53. தூய உயிர்க்கே யோகமிலை கட்டுதயம்**
**யாவுமிலை துன்ப மிலை**

**54. தூய உயிரில்தான் தங்கல் வினைவிலகல்**
**யாவுமிலை துன்ப மிலை**

**55. தூய உயிரில் குணநிலை வேறுபாடு**
**யாவுமிலை புத்கலப் பண்பு**

**56. நிறம்குணம் யாவும் அமைந்த உயிராய்**
**உரைப்பர் உலகியல் நோக்கு**

**57. பாலுடன் நீர்கலப்பே போல்தான் உயிருடல்**
**நாளும் அவைவேறு வேறு**

**58. திருட்டு வழிஎன்பர் மக்கள் வழக்கில்**
**திருடுமோ நாளும் வழி?**

59. அதுபோன்றே, உயிர் தங்கிய உடலின் நிறம் முதலானவை உயிரின் குணங்களாக உலக வழக்கில் கூறப்படுகின்றது. உண்மையில் உயிரில் கலந்த வினைகள், மற்றும் உடல் சார்ந்த வினைகள் ஆகியவற்றினால் தான், அவ்வுடல், நிறம் முதலான குணங்களைப் பெறுகின்றது. இதுவே ஜினபகவான் அருளுரையாகும்.

60. இதைப்போன்றே சுவை, மணம், ஊறு, வடிவம் முதலானவை, உலக வழக்கில் உயிரின் மேல் ஏற்றிக்கூறப்படுகின்றது. உண்மையில் அவை, உயிரின் குணங்கள் அல்ல.

61. பிறவியில் உழலும் உயிரிடத்து, முன்கூறிய நிறம் முதலானவை கூறப்படுகின்றது. வீடு பேறு அடைந்த நிலையில், உயிரில் அவை இல்லை.

62. நிறம் முதலான (புற்கலத்) தன்மைகள் உயிரினுடையவை எனக் கொண்டால், அந்நிலையில் உயிர், உயிரல்லவை என்ற வேறுபாடு இல்லாமல் போகும்.

63. பிறவி நிலையில் உள்ள உயிர்களுக்கு, நிறம் முதலானவை உண்டு எனக்கொண்டால், அவ்வுயிர்களும் உருவம் உடையவை என்றாகிவிடும் !

64. அவ்வாறாயின், புத்கலப் பொருள்களை, உயிர் எனக் கருதவேண்டிவரும் ! புத்கலப் பொருளும் வீடுபேறு அடையும் எனக் கொள்ள வேண்டும் ! இது அறிவின்மையாகும்.

65. ஓரறிவு முதல் ஐயறிவு வரையிலான ( ஐம்பொறிகளை உடைய) உயிர்கள், பருவுடலிகள், நுண்ணுடலிகள், நிறை உயிர்கள் நிறைவடையா உயிர்கள் ஆகிய அனைத்து வகையான உயிரினங்களும் வினையின் விளைவுகள் ஆகும்.

66. வினைகளாகிய புற்கலத் தொகுதி, உயிரில் கலந்துவிடுவதால் உயிர் அவ்வாறான உடல்களில் சென்று தங்குகின்றது. எனவே வினைத் தொகுதியை, எவ்வாறு உயிர் எனக் கருதமுடியும்? (முடியாது)

67. நிறை உயிர், நிறைவுறா உயிர், நுண்ணுயிர், பருவுடலுடை உயிர் எனப் பலவகையாக நூல்களில் கூறப்படுவது உலக வழக்கில்தான் என்றறிய வேண்டும் ( உண்மையில் உயிருக்கு உருவம் ஏதும் இல்லை)



**59.** **உயிர்கலந்த வெவ்வினையால் மேனி நிறமே**
**உயிர்க்குண்டோ ஓர்நிறம்நாற் றம்?**

**60.** **உலகியலில் கூறுவர் புத்கலத்தின் பண்பை**
**நிலையுயிர் மேல்ஏற்றி யே**

**61.** **பிறவியில் உள்ளவரை இவ்வுயிரைச் சொல்வர்**
**நிறத்து டனும்தான் இணைத்து**

**62.** **புத்கலத்தின் பண்பே உயிருடைத் தாயினங்கே**
**எத்தகைத்தாம் வேற்றுமை உண்டு?**

**63.** **பிறவியில் எவ்வுயிரும் புத்கலம் என்றால்**
**உருவமே எய்தும் உயிர் !**

**64.** **உருவம் உடையதே புத்கலத்தின் பண்பு**
**பெறுமோ அவைஉயிர்போல் வீடு?**

**65.** **ஒன்றுமுதல் ஐந்தறிவு கொண்டதாம் பல்வகை**
**நுண்ணுடலும் நாமவினை யால்**

**66.** **புத்கலச் சேர்க்கை உயிரில் புகுதலால்**
**எத்தனையோ மெய்வகை யாம்**

**67.** **நிறைகுறை நுண்ணுயிர் மற்று பருமன்**
**அறைதல் உலகியல் நோக்கு**

68. அவ்வாறே நூல்களில் குணஸ்தானங்கள் கூறப்பட்டுள்ளன. மோக வினையின் உதயத்தால், உயிரில் உண்டாகும் திரிபு நிலைகளே , பல்வேறு குணங்களின் படிநிலைகள் ஆகும். ( தூய உயிரில் குணஸ்தானங்களாகிய பேதங்கள் இல்லை)

## அதிகாரம் 2
## கர்த்தாவும் கருமமும்
(செய்பவனும் வினையும்)

69. ஓர் உயிர், எதுவரை தன் இயல்புக்கு மாறான கோபம் முதலான உணர்வுகளில் மூழ்கிவிடுகின்றதோ, அதுவரை அறியாமையில் உள்ளது என்று பொருள்.

70. வினை ஊற்றின் காரணமாகவே, உயிர், கோபம் முதலான துவர்ப்பசைகளில் தோய்கின்றது என ஜினபகவான் அருளியுள்ளார்.

71. எப்போது ஓர் உயிருக்கு வினை ஊற்று பற்றிய தெளிவு உண்டாகின்றதோ, எப்போது உயிர், கோபம் முதலானவை, தன் இயல்புக்கு மாறு பட்டவை என்று உணர்கின்றதோ, அப்போது புதிய வினை ஊற்று தடுக்கப்படும்.

72. வினை ஊற்று என்பது தூய்மையற்றது : உயிரின் இயல்புக்கு மாறுபட்டது : எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாவது : இதை உணருகின்ற உயிர், வினை ஊற்று உண்டாகாத நிலையில் நிற்கும்.

73. நான் தனியானவன் : நான் தூய்மையானவன்: நான் செருக்கில்லாதவன்: நான் அறிவன் : நான் நற்காட்சியாளன் : நான் முழுமையானவன் : எனவே நான் கோபம் முதலான வினை ஊற்றுக்கான செயல்களில் ஈடுபட மாட்டேன் என்று தூய உயிர் உறுதி கொள்ளும்.

“ நானென்றும் தனிமை யானவன் நல்லான்மன் அருவ மானவன்
நானென்றும் தூய்மை யானவன் நன்ஞானம் காட்சி யானவன்
நானென்றும் மோகம் அற்றவன் நலமழிக்கும் தாகம் அற்றவன்
நானென்றும் சீலம் ஏற்றவன் நண்ணுகஇவ் வெண்ணம் நாளுமே!”
பன்னிரு சிந்தனைகள் (பாரஸ அணுவேக்கா – 20)



**68.** **மோகவினைத் தாக்கம் குணநிலைகள் ஒருயிரில்**
**ஆகும் திரிபென்றே காண்.**

## அதிகாரம் 2
## கர்த்தாவும் கருமமும்
**(செய்பவனும் வினையும்)**

**69.** **தன்னியல்பின் மாறாம் துவர்ப்பசைத் தோய்தலே**
**மன்னுயிர் பேதைமை யாம்**

**70.** **முன்வினை ஊற்றின் பயனாய்த் துவர்ப்பசையில்**
**மன்னுயிர் தோய்தலா மே**

**71.** **எவ்வுயிர் தன்வினை ஊற்றை உணருமோ**
**அவ்வுயிரில் உண்டாம் செறிப்பு**

**72.** **ஊற்றே அழுக்கு துயரத்தின் காரணம்**
**ஊற்றை அடைத்தல் கடன்**

**73.** **நற்காட்சி தூய்மை தனிமை பசையின்மை**
**தற்காப்பு என்றறிதல் மாண்பு**

74. வினை ஊற்றுகள் உயிரோடு கலந்துள்ளன. ஆயினும் அவை நிலையில்லாதவை : மாறும் தன்மையுடையவை : அடைக்கலம் இல்லாதவை : துன்பவடிவின : துக்கம் தருவன : இவ்வாறு அறியும்போது தன் இயல்புக்கு மாறானவற்றிலிருந்து அவ்வுயிர் விலகத்துணியும்.

75. உயிர், தானே மூலமாக (உபாதானமாக) நின்று, வினைகளின் செயல்களையோ, உடல் சார்ந்த வினைகளின் (நோகருமங்களின்) செயல்களையோ செய்யவில்லை என்பதை அறிவன் உணருகின்றான்.

76. புற்கல வினைகள் பலவாகும் என்று அறிவன் அறிகின்றான் என்றாலும் நல்லறிவன் அத்தகைய மாறுகைகட்குத் தன்னை உட்படுத்தாமல் இருப்பதில் உறுதி கொள்வான். அவ்வுறுதியின் காரணமாக, அவன், தன்னிடம் வினைகளைச் சேர்த்துக் கொள்வதில்லை.

77. நல்லறிவன், உயிரில் நிகழும் பலவகையான நிகழ்வுகளை அறிவான் : எனவே அவன் தன் உயிரின் இயல்புக்குப் புறம்பான நிகழ்வுகளில் ஈடுபடுவது இல்லை : அவ்வித நிகழ்வுகளை அவன் ஏற்படுத்துவதும் இல்லை.

78. நல்லறிவன் வினைகளால் வரக்கூடிய எண்ணற்ற, அளவில்லாத இன்ப, துன்பங்களை அறிவான். எனவே அவன், தனதல்லாத பிற பொருள்களைத் தனது என்று ஏற்பதும் இல்லை : உண்டாக்குவதுமில்லை.

79. புத்கலமும் பிற பொருளாக மாறுவது இல்லை. பிறபொருள்களை உண்டாக்குவதும் இல்லை. தன்னுடைய தன்மையில் அப்பொருளும் நிலைத்துள்ளது.

80. புற்கலம், உயிரின் திரிபு உணர்வை நிமித்தமாகக் கொண்டு, உயிரில் கலந்து விடுகிறது. உயிரும் புற்கல வினையை நிமித்தமாகக் கொண்டு செயலாற்றுகிறது. ( எனவே உயிர், தன் இயல்பை மறந்து திரிபு அடைந்துத் துன்புறுகின்றது).

81. உயிரும், வினைகளின், குணங்களை ஆக்குவது இல்லை : வினைகளும் உயிரின் பண்புகளை ஏற்பது இல்லை. ஆயினும் ஒன்றுக்குப் பிறிதொன்று நிமித்தமாவதால், ஒன்றுடன் ஒன்று கலந்து திரிபு நிலைகளை அடைகின்றன.



**74.** **ஊற்றுதான் மாறிடின் துக்கம் விலகிடும்தன்**
**ஆற்றல் உணர்தல் அறிவு**

**75.** **உயிர்வினை யொன்றையும் ஆக்குவ தில்லை**
**உயிர்அறி தல்மட்டுமே யாம்**

**76.** **நல்லறிவன் தானறிவான் புத்கல மேவினை**
**நல்லுறுதி கொள்வான் தடுப்பு**

**77.** **உயிரியல்பு தன்னை அறிதலே ஞானம்**
**மயங்கிடான் நல்லறிவன் தான்**

**78.** **எண்ணிலாத் துன்பங்கள் இன்பங்கள் தன்வினையால்**
**என்றறிவான் எய்தான் திரிபு**

**79.** **புத்கலமும் மாறாது வேறொன்றாய் அஃதும்தான்**
**அத்தன்மை தன்னில் நிலை**

**80.** **புத்கலமும் ஒருயிரும் ஒன்றில் பிறிதொன்று**
**தொத்தும் நிமித்தமே யாம்**

**81.** **ஆக்குவதில் ஒன்றே பிறிதொன்றின் பண்பினை**
**ஆக்கம் நிமித்தத் திரிபு**

82. உயிரில் உண்டாகும் நல்ல, தீய உணர்வுகளுக்கு அவ்வுயிரே காரணம் (கர்த்தா). உயிர், எப்போதும் புத்கலத்தின் குணங்களை ஆக்குவதில்லை.

83. உண்மை நோக்கில், உயிர் தூயதாகவும் உள்ளது. தன் தூய நிலையில் மாறுபடும் திரிபு நிலைக்கும் தானே காரணம் ஆகின்றது. அத்திரிபினால் உண்டாகும் விளைவையும் தானே நுகருகின்றது.

84. வழக்கு நய நோக்கில், உயிர், தானே புற்கல வினைகளைச் செய்கின்றது. அவற்றின் பயனைத் தானே நுகருகின்றது என்று சொல்லப்படுகின்றது.

85. உலகவழக்கில் கூறப்படுவது போன்று உயிரே, புற்கல வினைகளைச் செய்கின்றது. அதுவே அவற்றின் பயனை நுகருகின்றது என்பதை ஏற்றுக்கொண்டால் உயிருக்கு இருவேறுபட்ட செயல்களையாக்கும் நிலை உண்டு என்றாகிவிடும். உண்மையில் இக்கருத்து, ஜினபகவானால் ஏற்கப்படாத ஒன்று.

86. உயிரின் நிகழ்வும் புற்கலப்பொருள் நிகழ்வும் ஆகிய இரு நிகழ்வுகளும் உயிராலேயே நிகழ்கின்றன என்பது பொய்க் காட்சியாகும். உண்மையில் புற்கல வினைகளை, உயிர் தன்னுடைய திரிபு உணர்வுகளால், தன்னுடன் கலக்குமாறு செய்கின்றது. அக்கலப்பின் பயனை அவ்வுயிரே துய்க்கின்றது.

87. பொய்மை, உயிரினுடையது, புத்கலத்தினுடையது என இருவகைப்படும். அதுபோலவே அறியாமை, யோகம், மோகம், கோபம் முதலானவையும் இரண்டிரண்டு வகைப்படும்.

88. பொய்க்காட்சி, மோகம், அறியாமை, விரதமின்மை, யோகம் முதலானவை உயிரால் உயிரில் உண்டானவையாகும். அவை புத்கல வினைச் சேர்க்கையின் விளைவாகும்.

89. தொடக்கமற்ற காலமாக, உயிரோடு, புத்கல வினைத் தொடர்பு கூடி உள்ளது. எனவே பொய்மையும், அறியாமையும், புலன் அடக்கமின்மையும் ஆகிய மூன்று தன்மைகளும் உயிரோடு உள்ளன.



**82.** **உயிரின் உணர்வுக்கே அவ்வுயிர்தான் மூலம்**
**உயிர்செய்யா புத்கலத்தின் பண்பு**

**83.** **உண்மையில் தூய்மைக்கும் தன்திரிபுக் கும்துன்பத்**
**தன்மைக்கும் தானே பொறுப்பு**

**84.** **உயிரே வினைகளை யாக்குமெனச் சொல்லல்**
**மயங்கும் உலக வழக்கு**

**85.** **புத்கல வாக்கம் நுகர்தல் எனவிரு**
**தத்துவம் இல்லை உயிர்க்கு**

**86.** **தன்னுணர்வு புத்கலப் பண்பாக்கம் என்றிரண்டும்**
**மன்னுயிர் செய்யுமெனல் பொய்**

**87.** **பொய்மை வகையிரண் டேஉயிரில் புத்கலத்தில்**
**பொய்யறிவு யோகமோக மும்**

**88.** **பொய்மோகம் பேதைமை நோன்பின்மை யோகமெலாம்**
**செய்வினை யவ்வுயிர்ப் பாடு**

**89.** **தொடக்கம் முதல்மோகம் சேர்க்கையால் பொய்மை**
**அடக்கமின்மை பேதைமை யாம்**

90. உண்மை நோக்கில் உயிர் தூயதுதான் : குற்றமற்றதுதான் : ஆனால் தொடக்கமற்ற காலமாக உள்ள வினைகளின் தொடர்பினால், மேற்கூறிய மூன்று குற்றங்களையும் உயிரே புரிகின்றது. தன்னிடம் தோன்றும் திரிபு நிலைகளுக்குத்தானே கர்த்தா ஆகின்றது–

(வினைகள் அக்குற்றங்களைச் செய்யவில்லை. வினைத் தொடர்பால், உயிரே செய்கின்றது )

91. உயிரில் உண்டாகும் உணர்வுகளுக்கு உயிரே கர்த்தா : அதுபோன்றே, புற்கலப் பரமாணுக்களின் வினையாக மாறும் தன்மைக்கு, அப்புற்கலப் பொருள்களின் தன்மையே காரணம் ஆகின்றது. (புற்கலப் பொருள்கள் தாமே தான் வினைகளாக மாறுகின்றன)

92. அறியாமையுடைய உயிர், பிறபொருள்களைத் தன்னுடையனவாகக் கருதுகின்றது. தானும், தன் தூய இயல்புக்குப் பொருந்தாத, திரிபுணர்வை அடைகின்றது. இவ்விதம் அது, வினைக் கட்டுக்குத் தானே கர்த்தா ஆகின்றது.

93. தன்னுயிரைத் தவிர மற்றவையாவையும் புறப்பொருளே என்றுணரும் உயிர் அறிவன் ஆகின்றது. அத்தகைய உயிர், பிற பொருள்களைத் தனதாகக் கருதுவதில்லை. எனவே அவ்வுயிரில் புதிய வினைகள் சேருவதில்லை.

94. பொய்க்காட்சி, பொய்யறிவு, பொய் ஒழுக்கம் ஆகியவற்றில் மூழ்கிய உயிர், கோபம் முதலான திரிபு உணர்வுகளில் மூழ்கிவிடுவதால், தன் நிகழ்வுகளுக்குத் தானே கர்த்தாவாகி வினைகளைக் கட்டிக் கொள்கின்றது.

95. உயிர், தன் இயல்பிலிருந்து மாறி, பிற பொருள்களைத் தன்னுடையவை என எண்ணுதல், அவ்வுயிரின் உணர்வில் ஏற்படும் குற்றங்களாகும். (பாவனைக் குற்றம்).

96. தன்னுடைய இயல்பை மறந்து, பிற பொருள்களைத் தன்னுடையவை என்று கருதுவோர் அறிவிலிகள் ஆவர்.



**90. உண்மையில் தூய உயிர்வினைச் சேர்க்கையால்**
**தன்மை திரிந்தே கெடும்**

**91. உயிரின் உணர்விற் குயிரேதான் மூலம்**
**உயிரல்ல வைக்குமது போன்று**

**92. பேதை உயிர்பிற வற்றைத் தனதாக்கும்**
**ஆதலால் கட்டும் வினை**

**93. பொருளென்ப தன்னுயிர் என்பான் அறிவன்**
**வருவதுண் டோவினை யாங்கு?**

**94. பொய்க்காட்சி பொய்யறிவு பொய்யொழுக்கம் மூழ்குதலால்**
**வெவ்வினை கூட்டும் உயிர்**

**95. தன்னியல் மாறிப்புறப் பொருள் தன்னுடைத்தாய்**
**எண்ணுதல் பாவனைக்குற் றம்**

**96. தன்னுயிர் தான்மறந்தே மற்றவற்றைத் தன்னுடைத்**
**தென்பார் அறிவிலி கள்**

97. உண்மை நிலையை உணரும் அறிவர், தன் நிகழ்வுகளுக்குத் தானே கர்த்தா என்றுணர்கின்றார். எனவே வினை உதயத்துக்குக் காரணமான நிகழ்வுகளிலிருந்து விலகியிருக்கின்றார்.

98. உயிரே வினைகளை யாக்கும் கர்த்தா என்பது பொய்மையின் கூற்றாகும். உலகியல் நோக்காகும்.

99. உயிர், பிற பொருள்களை யாக்குவதுமில்லை : தானும் பிறபொருள்களாக மாறுவதுமில்லை.

100. உயிர், யோகத்திற்கும் உபயோகத்திற்குமே கர்த்தாவாகும். பிற பொருள்களை உயிர் செய்வதில்லை.

101. ஞானமறைப்பு முதலான வினைகள் தன்னுடையவை யல்ல என்பதை நல்லறிவன் நன்கறிவான்.

102. உயிரே, இன்ப, துன்பங்களுக்குக் காரணமான செயல்களைச் செய்கின்றது. அது செய்யும் செயல்களின் பயனை அதுவே துய்க்கின்றது.

103. எந்த ஒரு பொருளும் தனக்கே உரிய குணங்களுடன் உள்ளது. அக்குணத்தை அது இழப்பதில்லை. எனவே குணம், பொருளை விட்டுப் பிரிந்து, வேறு ஒரு பொருளில் கலக்க முடியாது. உயிர் புத்கலமாகவோ, புத்கலம் உயிராகவோ மாறாது.

104. உயிர், புத்கலத்தையோ, புத்கலத்தின் குணங்களையோ, ஆக்குவதில்லை. எனவே புத்கலத்தின் குணங்களுக்கு உயிர் காரணமாகாது.

105. தூய்மையற்ற உயிரின் திரிபு உணர்வுகளால் எண் வினைகள்உயிருடன் கலக்கின்றன. இதனையே உலக வழக்கில், ''உயிர் வினைகளைச் செய்தது'' என்று கூறப்படுகிறது.

106. போரில் வீரர்கள் ஈடுபடுகின்றனர், ஆயினும் உலக வழக்கில், அரசன் போரிட்டான் என்று கூறப்படுகின்றது. அதுபோலவே, அறிவு மறைப்பு முதலான புற்கல வினைகளை, உயிர் செய்கின்றது என்று கூறப்படுகின்றது.



**97. தன்துய்ப்பிற் குத்தானே காரணம் என்றுணர்வார்
தன்னூற்று தான்தவிர்ப் பார்**

**98. ஆன்மா வினைகளை யாக்கும் காரணி
தானென்ப பொய்யுலக நோக்கு**

**99. உயிர்தான் பிறபொருள் ஆக்குவ தில்லை
உயிரும் பிறவாகா வாம்**

**100. உயிரென்ப யோகவுப யோகத்தின் மூலம்
உயிர்செய் வதிலையே மற்று**

**101. ஞான மறைப்பு முதலாம் வினைகளெலாம்
ஞானியறி வான்தன்னின் வேறு**

**102. தன்னுடைப் பாவனைக்குத் தானேதான் காரணன்
தன்வினைத் துய்ப்பானும் தான்**

**103. பொருளொன்றின் பண்பு பிறிதொன்றாய் மாறாப்
பொருளுயிரும் புத்கலமா கா !**

**104. பொருள்குணம் என்றிரண்டும் செய்வதில்லை ஆன்மா
அறிகமூலம் இல்லை யவன்**

**105. எண்வினை தம்விளைவுக் கோருயிர் தான்நிமித்தம்
பண்ணுமென்ப இவ்வுலக நோக்கு**

**106. போரிடுவர் வீரர் வழக்கினில் வேந்தென்பார்
ஆருயிரைக் கூறுவ ராங்கு**

107. எனவே, உயிரே, புற்கல வினைகளைச் செய்கின்றது. நிலைப்படுத்துகின்றது. பயன் பெறுமாறு செய்கின்றது என்றெல்லாம் கூறப்படுவது உலகியல் நோக்காகும். ( உண்மை நய நோக்காகாது)

108. மக்கள் எய்தும் துன்பங்களுக்கு, நாட்டு மன்னனே காரணம் என்பர். அதுபோல் உயிரே புத்கல வினைகளையாக்குகின்றது என்பர் உலகோர்.

109. உண்மையில் வினைக்கட்டுக்கு நான்கு காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை 1) பொய் நம்பிக்கை 2) புலனடக்கமின்மை 3) துவர்ப்பசைகள் 4) யோகம் என்பன.

110. எனவே மனிதனின் குணநிலைகள் , பொய்க் காட்சியாளன் முதற்கொண்டு சயோகி கேவலி வரை, பதின்மூன்றாகக் கூறப்பட்டுள்ளது.

111. இந்த 13 நிலைகளும் உண்மையில், உயிரற்ற புற்கல வினைகளின் கலப்பினால் உயிரில் அமையும் நிலைகளாகும்.

112. உயிர் வினைகளைச் செய்யாவிட்டாலும் புற்கல வினைகளின் கலப்பினால், தன் இயல்பான தூய்மை நிலைக்குப் பொருந்தாத திரிபு நிலையில், அத்தகைய குணவேறுபாடுகளை அடைகின்றது.

113. உயிரின் குணமான உபயோகம், உயிரிலிருந்து வேறுபட்டது அன்று. ஆனால் கோபம் முதலான உணர்வுகள் உயிரின் இயல் குணங்கள் அல்ல. ஆகவே அவற்றை உயிரிலிருந்து வேறுபட்டனவாகவே கொள்ளுதல் வேண்டும்.

114. அதுபோன்றே, பொய்க்காட்சி, உடல்சார்ந்த வினைகள் ஆகியவையும் உயிரற்ற புற்கலச் சேர்க்கையால் உயிரில் நிகழும் கலப்புகளாகும். அவற்றை உயிரின் குணங்களாக ஏற்பது பிழையாகும்.

115. மேற்கூறிய வெகுளி, பொய்க்காட்சி, உடல் சார்ந்த வினைகள் ஆகியவற்றை உயிரின் இயல் குணங்களாக ஏற்றால், அவை என்றுமே உயிரிலிருந்து பிரிக்க முடியாதவை என ஆகிவிடக்கூடும். எனவே அவை உயிரிலிருந்து வேறானவை எனத் தெளிதல் வேண்டும்.



**107. புத்கலத்தின் ஆக்கம் கலப்பு நுகர்வெல்லாம்
சத்துயிர் ஆக்குமென்ப பொய்**

**108. மக்கள் துயரம்அம் மன்னவனால் என்பரன்றோ
குற்றம் அதுபோல் உயிர்க்கு**

**109. பொய்மை விரதமின்மை யோகம் துவர்ப்பசைகள்
செய்வினைக்கட் டின்கா ரணம்**

**110. பொய்க்காட்சி யாளன் முதல்பதின் மூன்றுநிலை
எய்தும் குணத்தானங் கள்**

**111. புத்கலத்தின் சேர்க்கையால் அப்பதின் மூன்றுநிலை
சத்துயிரில் தானமையு மாம்**

**112. தான்செய்வ தில்லை வினைகளை ஓருயிர்
மாண்பு கெடுதல் திரிபு**

**113. உபயோகம் என்ப உயிருடைத்தாம் கோப
விபரீதம் ஆகா உயிர்**

**114. பொய்க்காட்சி யோடு குறுவினைகள் யாவுமே
மெய்யுயிர்ப் பண்பாகா தே!**

**115. குறுவினை பொய்க்காட்சி தீச்சினம்பண் பாயின்
பிரிக்க முடியுமோ பின்**

116. புற்கலங்களான வினைகள் உயிரோடு கட்டுறுதல் இல்லை. புற்கலங்கள் தாமே வினையாக நிகழ்வதுமில்லை என்று கருதுதல் பிழையாகும்.

117. புற்கலங்களுக்கு வினையாகும் தன்மை இல்லாது போனால், வினைக்கட்டுமில்லை : பிறவிச் சுழற்சியும் இல்லை.

118. புற்கலப் பொருளை, உயிரே வினைகளாக மாற்றுகின்றது என்றால், அறிவுப் பண்புடைய உயிர், எவ்வாறு அதனைச் செய்யும்?

119. அவ்வாறே, புற்கலப் பொருள், தாமே வினைகளாக மாறி, உயிருடன் கலந்து விடுகிறது என்று சொல்வதும் பொய்யாகும்.

120. உயிர், தன் இயல்புக்கு மாறான திரிபு நிலையில் உள்ள போது, வினையாக மாறும் புற்கலத்தோடு நிமித்த, நைமித்திக நட்பு கொள்கின்றது. அதன் காரணமாக, புற்கலம் வினைவடிவமாக மாற்றம் பெறுகின்றது. புற்கலத்துக்கும் நிகழ்வுறும் ஆற்றல் உள்ளதால், அது வினையாக மாறுகின்றது.

121. உயிர் தன்னிடம் வினையைக் கட்டிக் கொள்வதில்லை : அது திரிபு உணர்வுகளில் மூழ்குதலும் இல்லை என்று கொண்டால், உயிரிடத்து நிகழ்வாக்கமே இல்லையென்று ஆகிவிடும் ( உயிர் நிகழ்வாக்கம் உடையது என்பதே உண்மை)

122. உயிரில் திரிபுணர்வே இல்லையாயின், அவ்வுயிர் நாற்கதிப் பிறவிச் சுழற்சியில் சிக்கும் நிலையே எழாது.

123. புற்கலவினைக் கலப்பால் உயிர் கோபம் முதலான திரிபு உணர்வுகளை உடையதாக ஆகிவிடுகின்றது. ஆயினும் உயிரில் சுய நிகழ்வாக்கம் இல்லாது போனால், புற்கலம் உயிரை எப்படி அத்தகைய உணர்வுகளை உடையதாக்க முடியும்?

124. உயிர், தானேதான் வினையாக மாறும் என்றால், உயிரின் இயல்பே பொய்யாகி விடும்.



**116. இணைதல்சேர் தல்செய்யா புத்கலங்கள் தாமே**
**எனும்மொழி தான்பிழை யாம்**

**117. வினையாகும் தன்மைதான் இல்லாயின் ஆங்கே**
**வினைக்கட் டொடுபிறவி யில்**

**118. புத்கலத்தை ஒருயிர் தான்வினைக ளாக்குமெனின்**
**உத்தம ஞானம்தான் ஏன்?**

**119. புத்கலமும் மாறும் வினகளாய்த் தாமெனும்**
**தத்துவமும் பொய்மை யுடைத்து**

**120. ஒருயி ரின்திரிபால் புத்கலச் சேர்க்கையாம்**
**மாறுதல் புத்கலப் பண்பு.**

**121. கட்டில்லை யோர்திரிபு மில்லை யெனின்உயிரின்**
**சொத்தில்லை யோர்நிகழ்வே காண்**

**122. ஆருயிர் தன்னில் திரிபுணர்வே இல்லெனின்**
**சேருமோ நாற்கதி மாற்று**

**123. தன்னிகழ் வாக்கம் உயிரினில் இல்லாயின்**
**உண்டாமோ புத்கலக் கூட்டு**

**124. தானே வினையாகும் என்றால் உயிரியல்பு**
**தானேது ஆங்கேபொய் நோக்கு**

125. வெகுளியுடன் கூடிய உயிர், வெகுளியுடையது : அவ்வாறே செருக்குடன் கூடிய உயிர், செருக்குடையது : மாயம் இணைந்த உயிர், மாயமுடைத்து : கடும் பற்றுடன் இணைந்த உயிர் பற்றுடையதாகின்றது. எனவே இவ்வுணர்வுகள் உயிரில் தோன்றும் மாறுகைகள் ஆகும். உயிரின் இயல்பு அன்று.

126. உயிர், எச்செயலைச் செய்கின்றதோ, அச்செயலுக்கு அதுவே கர்த்தாவாகும். எனவே நல்லறிவனுக்கு அவனுடைய அறிவே கர்த்தாவாகும். அவ்வாறே, அறியாமையில் உள்ளவனுக்கு, அவனுடைய அறிவின்மையே கர்த்தா வாகும். (அவரவர், தம்தம் அறிவுக்கும், அறிவின்மைக்கும் ஏற்ப செயல்புரிகின்றனர்)

127. அறிவிலி வினைக்கட்டுக்கு ஆளாகின்றான். நல்லறிவன் வினைக்கட்டிலிருந்து விலகிவிடுகின்றான்.

128. அறிவனுக்கு அனைத்து நிகழ்வுகளும் அறிவின் வடிவமாகவே அமைகின்றன. அந்நிகழ்வுகள் அவன் நல்லுணர்வுக் கேற்பவே அமைகின்றன.

129. அறிவில்லாதவனுக்கு அனைத்து நிகழ்வுகளும் அறியாமையின் வடிவமாகவே அமைகின்றன.

“ நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்” ( குறள் – 833)

130. பொன்னால், பொன் அணிகலன்கள் அமையும் : இரும்பால், இரும்புப் பொருள்களே ஆகும். ( பொன்னால், இரும்புப் பொருள்களோ, இரும்பால் பொன் அணிகலன்களோ, ஆக முடியாது அல்லவா?) எனவே அவரவர் செயல்பாடுகளுக்கேற்ப, வினைக்கட்டோ கட்டின்மையோ அமையும்.

131. எனவே அறிவினால் அறிவுமயமான நிகழ்வுகளும் அறிவின்மையால் அறியாமை வடிவிலான நிகழ்வுகளும் உண்டாகும் என்பது தெளிவு.



**125. எப்பசை யோருயிர் தான்இணை கின்றதோ**
**அப்பற் றுடைத்தாம் உயிர்**

**126. எவ்வுணர்வோ அவ்வுணர்வின் மூலம்தான் அவ்வுயிரே**
**எஞ்ஞான மும்தானவ் வாறு**

**127. அஞ்ஞானி தன்வினையை ஈட்டுவான் ஞானியோ**
**எஞ்ஞான்றும் ஈட்டுதல் இல்**

**128. நல்லறிவன் தன்நிகழ்வே நல்லறிவுச் சார்பாகும்**
**நல்லறிவன் தன்னுணர்வே போல்**

**129. தீயறிவன் தன்நிகழ்வே தீமையின் சார்பாகும்**
**தீயறிவன் தீயுணர்வே போல்**

**130. பொன்னால் இரும்பால் பொருளாதல் போன்றேதன்**
**எண்ணம்போல் ஆகும் உயிர்**

**131. நன்மைதான் நல்லறிவால் தீமைதான் பொய்யறிவால்**
**உண்டாம் தெளிக உணர்ந்து**

132. உயிருக்கு பொய்யானவற்றில் நம்பிக்கை ஏற்பட்டால், பொய்க்காட்சி தோன்றுகிறது. அதுபோன்றே, புலனடக்கம் இன்மையால் விரதமின்மை அமைகிறது.

133. பொய் அறிவின் காரணமாக, உயிர்கள், பொய்ப் பொருளை நுகர்கின்றன. துவர்ப்பசைகளின் காரணமாக, தீய எண்ணங்கள் தோன்றுகின்றன.

134. உயிர், தன்மனம், மொழி, செயல்களால் தன்னில் நிகழ்வுகளைத் தோற்றுவிக்கின்றது. அதையே யோகம் என்பர். அத்தகைய யோகம் புறச் செயல்களில் அமையும் போது, இன்பமோ துன்பமோ உண்டாகின்றது.

135. புற நிமித்தங்களால் வினைகளின் தொகுப்பு உண்டாகின்றது. அவ்வினைத் தொகுப்பே , அறிவு மறைப்பு முதலான எட்டுவகை வினைகள் ஆகின்றன ( தொகுப்பு, வர்க்கணை எனச் சுட்டப்படும்)

136. உயிரில் எதுவரை வினைகளின் வருகை உள்ளதோ, அதுவரை அவ்வுயிர் அவ்வினைகளுடன் கூடியுள்ளது. அவ்வுயிர் எய்தும் விளைவுகளுக்கு அவ்வுயிரே காரணமாகும்.

137. விருப்பு, வெறுப்பு முதலான உணர்வுகள் உயிரில் தான் தோன்றுகின்றன. புத்கலங்களான வினைக்கு விருப்பு, வெறுப்பு ஏதும் இல்லை.

138. உயிரில் தோன்றும் திரிபு உணர்வுகள், வினையில் நிகழுவதில்லை. வினை உயிரற்றது.

139. புத்கலங்கள்தாம் வினைகளாக மாறுதல் அடைகின்றன என்றாலும் வினை உருவாக்கம் என்பது உயிரின் திரிபுணர்வு நிமித்தத்தால் உருவாகின்றது.

140. என்றாலும் அத்தகைய வினை உருவாக்கம் உயிரினின்று வேறுபட்டதாகும்.



**132. பொய்யினை நம்புதலால் பொய்க்காட்சி நல்லடக்கம்**
**பொய்ப்பின் விரதமின்மை யே**

**133. பொருளல்லாப் பல்பொருள் நாடுவான் பேதை**
**கருமனம் தான்பசை யால்**

**134. யோகம் மனம்மொழி யால்செயலால் அன்னியம்**
**ஆகின் அமையுமின்ப துன்பு**

**135. புறப்பொருள் நாட்டம் வினைத்தொகுப்பாம் அஃதே**
**மறைப்பு முதல்வினை எட்டு**

**136. வினைவரவு உள்ளவரை வெவ்வினைச் சேர்க்கை**
**வினைவரவின் மூலம் உயிர்**

**137. விருப்பு வெறுப்புகள் புத்கலத்தில் இல்லை**
**இருப்பு உயிரில்தான் உண்டு**

**138. உயிரில் திரிபுண்டாம் இல்லை வினைக்கே**
**உயிரற் றதேவினை யாம்**

**139. புத்கலமே தான்வினை யாகுமெனி னும்வினை**
**சத்துயி ரின்திரிபி னால்.**

**140. உயிரில் வினைகலக்கும் ஆயினும் அஃதே**
**உயிரின் பிறிதாம் பொருள்**

141. உயிரும், வினையும் ஒருங்கே இணைந்துள்ளது : இயைந்துள்ளது என்று சொல்லப்படுவது வழக்கு நய நோக்கில் தானே தவிர உண்மை அதுவல்ல : உண்மை நோக்கில் வினை உயிருடன் இரண்டற இணைவதில்லை : இயைவதுமில்லை.

142. உயிரில் வினை கட்டியுள்ளது : கட்டவில்லை என்று கூறுவது நயக் கோட்பாட்டில்தான். உண்மையில் தூய உயிர் நயங்களுக்கு அப்பாற்பட்டதாகும்.

143. முழுதும் தூய நிலையில் உள்ள உயிர், உண்மை நோக்கு, உலகியல் நோக்கு ஆகிய இரண்டையும் அறியும் ( ஏன்எனில் அது முழுதுணர் ஞானம் உடையது) ஆயினும் நயச்சார்புகளுக்கு அப்பாற்பட்டதே அத்தூய உயிர்.

144. எனவே நயங்களின் சார்பு இல்லாததே தூய உயிராகும். அவ்வுயிரே நற்காட்சியும் நல்லறிவும் உடையதாகும். (தூய உயிர் என்பதே நற்காட்சியும் நல்லறிவும் இணைந்த வடிவம் ஆகும்.)

## அதிகாரம் 3
## பாவம், புண்ணியம்

145. தீவினை பாவமாகும். நல்வினை புண்ணியமாகும் என கூறப்படுகின்றது. உண்மையில் பிறவியைத் தரக்கூடிய வினைகள் எப்படி நல்லதாக இருக்க முடியும்? இருவினையுமே பிறவிக்கு வித்துதான்.

146. கைவிலங்கு இரும்பால் செய்யப்பட்டதாயினும் பொன்னால் செய்யப்பட்டதாயினும், விலங்கு விலங்குதானே? அதுபோல நல்வினை, தீவினை இரண்டுமே, பிறவிச் சுழற்சியைத் தான் தரும்.

147. உண்மை நோக்கில், இரண்டு வினைகளுமே உயிருக்கு நன்மை பயப்பனவல்ல. எனவே உயிர் தூய்மையாக வேண்டுமெனில், இரண்டையுமே விலக்குதல் வேண்டும்.

148. தீய குணம் கொண்டோருடன் சேராது, அவர்கள் தொடர்பை நாடாது ( அவர்களிடம் வெறுப்புணர்வையும் செலுத்தாது) வாழ்தல் நன்னெறியாகும்.



**141.** **உயிர்வினைச் சேர்க்கை உலகியல் நோக்கே**
**உயிர்ஒன்றா தென்றும் வினை**

**142.** **கட்டுதலும் அல்லவும் சொல்வர் உலகியலில்**
**கட்டில்லை தூயவுயிர்க் கே**

**143.** **தூய உயிரறியும் உண்மை உலகியல்**
**ஆயினும் இல்லதே சார்பு**

**144.** **நயம்சாரா நல்லுயிரே நற்காட்சி ஞான**
**நயன்சேர்ந்தத் தூய்மை வடிவு**

## அதிகாரம் 3
## பாவம், புண்ணியம்

**145.** **தீவினையோ நல்வினையோ அவ்விரண்டும் நல்லதல்ல**
**யாவுமே நாற்கதி வித்து**

**146.** **இரும்பென்ன பொன்னென்ன எல்லாம் விலங்கே**
**இருவினை யும்தான் விலங்கு**

**147.** **தூய்மைதான் வேண்டின் இருவினைப் போக்குதல்**
**ஆய்ந்தறிந் தார்தம் கடன்**

**148.** **தீயோர் தமையறிந்தே சேராது நாடாது**
**காயாது வாழ்தல் கடன்**

149. வினைகளின் இயல்பையும் தாக்கத்தையும் நன்கறியும் ஒருவன், அவ் வினைகளிலிருந்து விலகுதல் வேண்டும்.

150.வேட்கை உடையவர், வினைகளைச் சேர்த்துக் கொள்ளுகின்றார். வேட்கை துறந்தவர், வினைக்கட்டிலிருந்து விடுபடுகின்றார், எனவே வேட்கையை விடுங்கள்! என்றார் பகவன்.

151. எம்முனிவர் பற்றிலிருந்து முற்றிலும் விலகியுள்ளாரோ, அழுக்குகளை மனத்தில் சேராமல் காத்துக் கொள்ளுகின்றாரோ, நல்லறிவனாக நிலைத்துள்ளாரோ, அவர் வீடுபேறு அடைகின்றார்.

152. எவர் தன் இயல்பில் நிற்கவில்லையோ, அவர் தவம் செய்யும் நிலையில் இருந்தாலும், அறிவு முதிர்ச்சியடையாத குழந்தையைப் போன்றவரே யாவார் !

153. நோன்பினை ஏற்பவராயினும், சில ஒழுக்கங்களை மேற்கொண்டவராயினும், துறவு ஏற்றவர்களாயினும், உயிரின் தூய இயல்பை அறியாதவரை, அத்தகையோர் அறியாமையில் இருப்பவரே ஆவர்.

154. உயிரின் முழுத் தூய்மையை உணராமல், புண்ணியத்தை விரும்பி, நற்செயல்களைச் செய்பவர்கள் நல் வினைக்கட்டுக் குள்ளாவார்களே தவிர, வீடுபேற்றை எய்த முடியாது.

155. உயிர் முதலான மெய்ப்பொருள்களை நம்புதலே நற்காட்சியாகும். அம்மெய்ப்பொருள்களைப் பற்றி நன்கு அறிதலே நல்லறிவாகும். விருப்பு, வெறுப்பு முதலான திரிபுணர்வுகளை நீக்குதலே நல்லொழுக்கமாகும். இம்மூன்றும் இணைந்ததே வீட்டு நெறியாகும்.

156. உண்மைநயம் குறிப்பிடும் கருத்தை உணர்பவனே நல்லறிவாளன் ஆவான். அவன் வழக்கு நயத்தை ஏற்பதில்லை. எனவே அத்தகைய நல்லறிவாளனுக்கு வினை கட்டு அழியும்.

157. வெண்மை நிறமுள்ள ஆடையில் அழுக்கு படிந்தால், அந்நிறம் மங்கிவிடுகிறது. அது போலவே பொய்மை என்னும் அழுக்கு உயிரில் படிந்தால், உயிர் தூய்மை கெட்டு, நற்காட்சி அழிந்துவிடுகிறது.



**149. வெவ்வினைத் தாக்கம் இயல்பறி வான்யாரும்**
**அவ்வினை நீக்கல் கடன்**

**150. ஆசை வெறுப்பினால் தோன்றும் வினைவிலக்கல்**
**மாசகன்ற அண்ணல் நெறி**

**151. பற்றினை விட்டொழித்தச் சாதுவர் நல்லறிவர்**
**வெற்றியால் எய்துவர் வீடு**

**152. எம்முனிவர் தன்னியல்பில் இல்லையோ அம்முனிவர்**
**நல்லறி வில்லாச் சிசு**

**153. நோற்பார் விரதிகள் சாதுவர் யாரேனும்**
**ஏற்காக்கால் மூடர் இயல்பு**

**154. புண்ணியம் வேண்டி வினைபுரிவர் நல்வினை**
**நண்ணுவர் நாடாரே வீடு**

**155. நம்புதலாம் காட்சி அறிதலாம் ஞானமுடன்**
**வெம்மை உணர்வின்றேல் வீடு**

**156. உண்மை உணர்வானே நல்லறிவன் பொய்வழக்கு**
**எண்ணான் வினைக்கட் டிலன்**

**157. வெண்ணிறம் மங்கும் அழுக்கினால் பொய்மையால்**
**தன்குணம் காட்சி கெடும்**

158. அழுக்கினால், கெடுகின்ற ஆடைபோல் அறியாமை என்னும் அழுக்கினால், நல்லறிவு கெடுகின்றது.

159. அவ்விதமே துவர்ப்பசைகள் என்னும் அழுக்கு படிந்தால் நல்லொழுக்கம் கெட்டுவிடுகின்றது.

160. உலகின் அனைத்துப் பொருள்களையும் அறியும் திறன் உடையது உயிர். ஆனால், வினை என்னும் அழுக்கு அவ்வுயிரில் கலந்து விடுவதால், பிறவியில் உழல்கின்றது. பிறவி உயிர், எல்லாப் பொருள்களையும் அறியும் திறனை இழக்கின்றது.

161. நற்காட்சியைத் தடைசெய்வது பொய்க் காட்சி என்று வினை வென்ற மேலோர் கூறியுள்ளனர். பொய்மைவினை ( காட்சி மறைப்பு வினை) உதயத்தால், உயிர், பொய்க்காட்சியுடையதாகின்றது.

162. நல்லறிவைத் தடை செய்வது பொய்யறிவு என்று வினை வென்றோர் கூறியுள்ளனர். பொய்யறிவு வினை ( அறிவு மறைப்பு வினை) உதயத்தால், உயிர், பொய்யறிவு உடையதாகின்றது

163. நல்லொழுக்கத்தைத் தடை செய்வது துவர்ப்பசைகள் என மேலோர் கூறியுள்ளனர். துவர்ப்பசை வினை ( மோகனீய வினை) உதயத்தால் உயிர், ஒழுக்கமற்றதாகின்றது. (எனவே வினை வெல்லும் மும்மணியை எய்தினால் தான் வீடு பேறு வாய்க்கும்)

## அதிகாரம் 4
## வினை ஊற்று (வரவு)

164. பொய்க்காட்சி, விரதமின்மை , யோகம், துவர்ப்பசைகள் ஆகிய நான்கும் வினைக் கட்டிற்குக் காரணங்களாகின்றன.

165. முன்கூறிய நான்கும் வினைக் கட்டிற்கு நிமித்த காரணங்களே யாகும். மூல காரணம் ( உபாதானம்) அவ்வுயிரேயாம்.

166. நற்காட்சியாளருக்கு ஊற்றும் இல்லை : கட்டும் இல்லை : செறிப்பு உண்டாகின்றது. ஏற்கனவே கட்டியிருக்கும் வினையை அவர் அறிகின்றார். எனவே அவர் புதிய வினைகளைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை. அவரே நல்லறிவராம்.



**158.** **தன்னிறம் மங்கும் அழுக்கினால் ஆடைபோல்**
**தன்னறிவு மங்குவான்மூ டன்**

**159.** **அழுக்குறும் ஆடைபோல் நாற்பசையால் மாந்தர்**
**ஒழுக்கமும் ஆங்கே கெடும்**

**160.** **எல்லாம் அறியும் திறனுடைத்தே ஆயினும்**
**வல்வினை மாய்க்கும் உயிர்**

**161.** **காட்சி மறைப்பதே பொய்மை வினைதன்னின்**
**ஆட்சியென் றார்நம் இறை**

**162.** **அறிவை மறைப்பதே பொய்மை வினையின்**
**கரமென்றார் நம்இறை வன்**

**163.** **ஒழுக்கம் இழப்பதும் பொய்மை வினையாம்**
**அழுக்கினால் என்றார் இறை**

## அதிகாரம் 4
## வினை ஊற்று (வரவு)

**164.** **பொய்மை விரதமின்மை யோகம் பசைநான்கும்**
**மெய்யுயிர் சேர்வினைக ளாம்**

**165.** **அந்நான்குந் தான்நிமித்த காரணம் வெவ்வினைக்கே**
**தோன்றும் உணர்வேமூ லம்**

**166.** **ஊற்றில்லை கட்டில்லை காட்சி உடையார்க்கே**
**ஊற்றில்லார் நல்லறிவ ராம்**

167. உயிரில் தோன்றும் ஆர்வம் முதலான திரிபுணர்வுகளால் தான் வினைக்கட்டு உண்டாகின்றது. அவ்வாறான ஆர்வம் முதலான திரிபுணர்வுகள் இல்லாத நிலையில் கட்டு இல்லை என்பதை நல்லறிவன் அறிவான்.

168. பழங்கள் மரத்திலிருந்து கீழே விழுந்தால் மீண்டும் மரத்தில் சேர்வதில்லை. அவ்வாறே வினைக் கட்டிலிருந்து விடுபட்ட நல்லறிவனை, வினைகள் மீண்டும் சேருவதில்லை (சித்தநிலை அடைந்த உயிர், மீண்டும் பிறவியில் உழல்வதில்லை)

169. ஆர்வம் முதலானவை இல்லாத நல்லறிவரிடம், முன்பு கட்டிய அனைத்து வினைகளும் மண் உருண்டை போல், கார்மண உடலில் புதைந்துகிடக்கும்.

170. பொய்மை, புலனடக்கமின்மை, துவர்ப்பசைகள், யோகம் (மனம், மொழி, மெய்களின் செயல்பாடுகள்) ஆகியவற்றால் ஒவ்வொரு கணமும் உயிரின் இயல்புக் குணங்களான அறிவும் காட்சியும் திரிபு நிலை அடைவதால், பலவகையான வினைக்கட்டு உண்டாகின்றது. ஆனால் நல்லறிவன் அத்தகைய வினைக்கட்டு இல்லாதவன் ஆகின்றான்.

171. நற்காட்சி, நல்லறிவு குறைந்தால் வினைக்கட்டுண்டாகின்றது.

172. மேற்கூறிய இரண்டுடன் நல்லொழுக்கம் சிதைவதால் வினைக்கட்டுண்டாகின்றது.

173. முன்னரே உயிரில் கலந்த வினைகளால் அவ்வுயிர் இன்ப துன்பங்களை யடைகின்றது.

174. உயிரில் கலந்த வினைகள், உரிய காலம் வரு முன்னர் பயன் தருவதில்லை.

175. ஒருயிர் தன் முன்வினைப்பயனை நுகரும்போதே, புதிய வினைகளும் வந்து சேருகின்றன.

176. நற்காட்சி உடையார்க்கு, வினையூற்று, வினை உதயம், வினைக்கட்டு முதலானவை இல்லை.



**167.** **விருப்புவெறுப் பில்லார்கட் டில்லார் அவர்கள்**
**அறிபவர் மட்டுமே யாம்**

**168.** **உதிர்ந்த கனிமரம் சேர்தலில்லை ஞானி**
**உதிர்த்த வினையுமவ் வாறு**

**169.** **நல்லறிவன் அஞ்சிடான் முன்வினைக்கே தன்உடலில்**
**வல்வினை ஒருருண்டை மண்**

**170.** **கணந்தோறும் வல்வினைக் கட்டுண்டாம் ஞானி**
**வினைக்கலப் பில்லவனே யாம்**

**171.** **காட்சி அறிவு குறைந்தால் வினைக்கட்டால்**
**வீழ்ச்சி யுறுமே உயிர்**

**172.** **நன்ஞானம் காட்சி ஒழுக்கம் குறைந்திடின்**
**எந்நாளும் வெவ்வினைக் கட்டு**

**173.** **முன்னரே கட்டிய வினைகள் இருந்துயிரில்**
**இன்பதுன்பத் துய்ப்பைத் தரும்**

**174.** **கட்டிய வினைகள் உரியதாம் காலங்கள்**
**எட்டுமுன் துய்ப்பில்வா ரா!**

**175.** **முன்வினைத் துய்க்கின்ற போதே புதுவினையும்**
**வந்துயிரில் சேர்தலும் உண்டு**

**176.** **நற்காட்சி உற்றார்க்கே ஊற்றில்லை ஒருதயம்**
**கட்டில்லை உண்மை உணர்**

177. ஆர்வம், செற்றம், மயக்கம் முதலானவை நற்காட்சியர்க்கு இல்லை : எனவே புதிய வினைக்கட்டும் இல்லை.

178. வினைக்கட்டுண்டாவதற்கான காரணங்கள் இன்மையால், நற்காட்சியாளர், கட்டிலிருந்து விலகியுள்ளார்.

179. ஒருவர் உட்கொண்ட உணவு வயிற்றில் ஜீரணம் ஆகின்றது. பின்னர் இறைச்சியாகவும், கொழுப்பாகவும், இரத்தமாகவும் பலவகை மாற்றங்களாக உடலில் நிகழ்வாக்கம் அடைகின்றது.

180. அதுபோன்றே, முன்பு கட்டிய புற்கல வினைகள், திரிபுணர்வை நிமித்தமாகக் கொண்டு, புதிய வினைகட்டுக்குக் காரணம் ஆகின்றன. அந்நிலையில் அவர் தூய நிலையிலிருந்து இழிந்தவர் ஆகின்றார். (ஊழ்வினை உருத்துவந்து ஊட்ட, தாழ்நிலையை அடைகின்றார்)

## அதிகாரம் 5
## வினைத்தடுப்பு

181. உயிர்தன் தூய உபயோகத்தில் உள்ளபோது சினம் முதலானவை தோன்றுவதில்லை, எனவே சினம் முதலானவை தோன்றும் போது உயிர் தன் தூய நிலையில் இல்லை.

182. உயிர் தன் தூய உபயோகத்தில் உள்ளபோது எட்டுவகையான வினைத் தொடர்பும், நோகருமத் தொடர்பும் உயிருக்கு இல்லை. எனவே வினைகளும் நோகருமமும் உதயமாகும் நிலையில், உயிர் தன் தூய நிலையில் இல்லை. ( நோகருமம் – உடல் சார்ந்த அமைப்பிற்கான வினைகள்)

183. அவ்வாறே, உயிருக்கு எப்போது உண்மையான அறிவு உண்டாகின்றதோ, அப்போது உயிர், தன் தூய நிலையில் உள்ளது. அத்தகைய உயிர் தன் இயல்புக்கு மாறான திரிபுணர்வுகளில் இருப்பதில்லை.

184. நெருப்பினால் சுடப்பட்டாலும் தங்கம் தன் குணத்தை இழப்பது இல்லை : அதுபோலவே வினைகளால் துன்பங்கள் நேர்ந்தாலும், அறிவன் தன் தூய இயல்பை விடுவதில்லை.

“ சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுத் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு” (குறள் –267)



**177. ஆர்வமோ செற்றமோ வஞ்சமோ காட்சியரைச்**
**சேர்வதில்லை கட்டில்லை யாங்கு**

**178. கட்டுக்காம் காரணங்கள் இன்மையால் காட்சியர்**
**கட்டின்றி மீள்வர் தெளிந்து**

**179. உணவுதான் உட்சென்றே மாறும் செரிப்பால்**
**நனிகொழுப்பு தோல்குருதி யாய்**

**180. முன்சேர்த்தத் தன்வினைகள் ஊற்றாகித் தன்திரிபால்**
**தான்பிறழுக் காரண மாம்**

## அதிகாரம் 5
## வினைத்தடுப்பு

**181. தூயதாய்த் தானிருப்பின் தோன்றாத் துவர்ப்பசைகள்**
**தூயதில்லை தோன்றின் பசை**

**182. தானிருப்பின் தூயதாய் எவ்வினையும் அங்கில்லை**
**தானில்லை தோன்றின் வினை**

**183. உண்மை யறிவே உபயோக மாயினுயிர்த்**
**தன்மை திரிபில்லை யாங்கு**

**184. சுட்டாலும் பொன்தன் இயல்பில் வினைவயப்**
**பட்டாலும் ஞானியவ் வாறு**

185. அறியாமை இருளில் மூழ்கும் உயிர், தன் உண்மை இயல்பை உணராமல், ஆர்வத்தில் மூழ்கிவிடுகின்றது.

186. உயிர் தான் தூய்மையானவன் என்பதை உணரும்போது தூய்மையாகின்றது. பிறபொருள் துய்ப்பில் ஆழ்ந்தால், மாசுபடுகின்றது.

187. நல்லறிவன் , தன்னுடைய நற்காட்சியின் மாண்பினால், பிற பொருள்கள் மீதுள்ள மோகத்தை விலக்கிவிடுவான்.

188. அகப்பற்று, புறப்பற்றுகளை நீக்கி வினையின் தாக்குதலிலிருந்து விடுபட்டு உண்மைச் சுகத்தைத் துய்ப்பவனே ஞானியாவான்.

189. தனித் தூய்மையான உயிரே நற்காட்சி நல்லறிவின் வடிவ முடைத்தாம். அத்தகைய உயிர் வினைகளிலிருந்து விடுதலை பெற்றதாகும்.

190. பொய்க்காட்சி, விரதமின்மை, யோகம், அறியாமை ஆகியவை வினை ஊற்றை உண்டாக்கும் என அருகன் அருளியுள்ளார்.

191. ஊற்றுக்கான காரணங்கள் இல்லையேல் ஊற்று உண்டாவதில்லை. வினைகள் உயிரில் வந்து சேருவதில்லை.

192. எட்டு வகையான வினைகள் இல்லையேல் உடல் சார்ந்த குறுவினையும் நாற்கதிச் சுழற்சியும் இல்லை.

## அதிகாரம் 6
## வினை உதிர்ப்பு

193. நற்காட்சியுடையோர், உயிருள்ள அல்லது உயிரற்ற எப்பொருளை நுகர்ந்தாலும், அந்நுகர்வு வினை உதிர்ப்புக்கே காரணமாகும்.

194. நற்காட்சியுடையோர், பிறபொருள்களின் மூலம் இன்ப துன்பங்களை நுகரும் நிலையில் வினை உதிர்ப்பு உண்டாகிறது.

195. நல்ல மருத்துவர், நஞ்சைக் கூட மருந்தாகப் பயன்படுத்துவார். அதுபோன்றே வினைகள் நல்லறிவரை கட்டுவதில்லை.



**185.** **அறியாமை மூழ்கும் உயிர்தன் இயல்பை**
**அறியாது வீழும் விருப்பு**

**186.** **தன்தூய்மை தானுணர்ந்தால் தானாகும் தூய்மையே**
**அன்னியம் மாசுடைத்தே யாம்**

**187.** **நன்ஞானி நற்காட்சி பெற்றே பிறபொருள்**
**தன்மோகம் நீக்கிடு வான்**

**188.** **அகப்புறப் பற்றின்றி வல்வினை யின்றிச்**
**சுகம்துய்ப்பான் நல்லறிவ னாம்**

**189.** **தனித்தூய்மை காட்சி அறிவின் வடிவாம்**
**வினையின் விடுதலை யாம்**

**190.** **பொய்மை விரதமின்மை யோகம் அறியாமை**
**உய்க்கும் வினைகளின் ஊற்று**

**191.** **காரணங்கள் இல்லாயின் ஊற்றில்லை வெவ்வினைச்**
**சேருதலும் இல்லை செறிப்பு**

**192.** **எண்வினைகள் இல்லாயின் ஆங்கே குறுவினை**
**என்றுமிலை நாற்கதியும் இல்**

## அதிகாரம் 6
## வினை உதிர்ப்பு

**193.** **எப்பொருள் துய்ப்பினும் நற்காட்சி பெற்றோர்கள்**
**அப்பொருளால் ஆகும் உதிர்ப்பு**

**194.** **துய்ப்பரே இன்பதுன் பங்கள் பிறபொருளால்**
**துய்த்தபின் ஆகும் உதிர்ப்பு**

**195.** **மருத்துவரால் நஞ்சும் மருந்தாம் வினையும்**
**அறிவரைக் கட்டாது காண்**

196. விருப்பம் இல்லாமல் கள் குடிப்பவனைப் போன்றே, நல்லறிவன் புறப் பொருள்மீது விருப்பின்றி நுகர்தல் செய்கின்றான். எனவே அவனுக்கு நுகர்வில் விருப்பம் இல்லை யாதலால் வினைக்கட்டு ஏற்படுவதில்லை

197. நற்காட்சியுடையோர் பற்றின்மையால் பிறபொருள்களைத் துய்த்தாலும் அவற்றில் மூழ்கி விடுதல் இல்லை : பொய்க்காட்சியர், பிறபொருள்களை நேரிடையாகத் துய்க்காத போதும் பற்றினால், துய்த்தவராகின்றார்.

198. வினைகளின் உதயத்தால் தோன்றும் திரிபுணர்வுகள் பலவாகும் என்று ஜினபகவான் அருளியுள்ளார். அத்தகைய திரிபுணர்வுகள் என்னுடையவை அல்ல : நான் தனித்த அறிவுப் பண்பு உடையவன் என்று அறிபவனே அறிவன் ஆவான்.

199. வினை உதயம் பலவகைப்படும். அத்தகைய புத்கல வினை உதயம் என் உயிரினுடையதல்ல என்றுணர்பவனே நல்லறிவன்.

200. தன் தூய இயல்பை அறிந்து, முன்வினையின் தாக்கத்தையும் அறிந்து, வினையின் வருகையைத் தடுத்தலே நற்காட்சியின் சிறப்பாகும்.

201. உண்மையில், ஒருவர் எல்லா மெய்நூல்களைக் கற்று தேர்ந்தவராயினும், அவரிடம் அணு அளவு திரிபுணர்வு உள்ளவரை அவரால் உயிரின் இயல்பை அறிய முடியாது.

202. உயிரியல்பை அறியாதவர் எப்படி நற்காட்சியாளர் ஆக முடியும்?

203. உணர்வு வினை பொருள்வினை என இருவகையான வினைகளின் வலிமையறிந்து, தன்னுயிர்ச் சிறப்பை உணர்ந்து தேருதலே நல்லறிவாகும்.

204. இயல்பிலேயே ஐவகையான அறிவைப் பெற்ற உயிர் தன்னை உணர்ந்தால், முக்திப் பேறு அடையலாம் ( மதி, சுருதி, அவதி, மனப்பரியய, கேவலம் எனபன ஐவகை அறிவாம்)

205. உலகியலில் எத்தனைச் செயல்களைப் புரிந்துதான் என்ன பயன்? நல்லறிவின் துணையால் வினைகளை வென்றிட முயலுதல் வேண்டும்.



**196.** **விரும்பாது கள்குடித்தார் போன்றே அறிவன்**
**விருப்பிலான் கட்டிலான் தான்**

**197.** **துய்ப்பினும் காட்சியர் துய்ப்பிலரே பொய்மையர்**
**துய்க்கா விடினும்துய்த் தார்**

**198.** **வினைஉதயம் பல்வகை யாமே அவைதாம்**
**தனின்வேறே என்ப தறிவு**

**199.** **விருப்புதான் புத்கலம் தன்னுடைத் தாகா**
**அறிதலே ஞானி கடன்**

**200.** **தன்னியல்பு தானறிந்தே தன்வினை ஊற்றடைத்தல்**
**நன்மைசேர் நற்காட்சி யாம்.**

**201.** **அணுவளவே பற்றிருப்பின் பன்னூல் பயின்றும்**
**குணமிலவே தானறியார் வீண்**

**202.** **தன்னுயிர் தானறியார் தான்மற் றறியார்தாம்**
**எங்ஙனம் காட்சியரா வர்**

**203.** **உணர்வுபொருள் என்றிரு வெவ்வினை ஓர்ந்தே**
**தனதியல் காண்ப தறிவு**

**204.** **அறிவைந்தும் பெற்றவுயிர் தன்னை அறிந்தால்**
**உரித்தாகும் முக்தி யுலகு**

**205.** **எத்தனைதான் செய்தென்ன வெவ்வினை தான்விலக**
**உத்தம நல்லறிவே கொள்**

206. பவ்வியர்கள் நல்லறிவைப் பெறுவதில் ஆர்வம் கொள்ளுதல் வேண்டும் : நிறைவு அடைதல் வேண்டும் : மகிழ்வடைதல் வேண்டும் : அத்தகைய ஞான ஆர்வமே பேரின்பமாகும்.

207. தன்னுடைமை என்பது தன்னுயிர் மட்டுமே என்றுணரும் நல்லறிவன், பிற பொருள் நாட்டம் கொள்ளுவதில்லை.

208. பிற பொருள்கள் என்னுடைமை என்று கருதுபவன் அறிவிலியே. நல்லறிவே தன்னுயிரின் இயல்பாகும்.

209. ‘‘என்னுடைய உடலும், நான் பெற்ற பலவகைப் பொருள்களும் இன்றே அழிந்தாலும், நான் வருந்த மாட்டேன், ஏன் எனில் அவை உண்மையில் என்னுடையவையல்ல’’ என்பவனே நல்லறிவன்.

210. நான் பொருட்பற்றற்றவன் : நிகழ்வுகளைப் பார்ப்பவனே தவிர, அவற்றில் அழுந்தி விடுபவன் அல்லன் என்பவன் நல்வினையையும் நாடுவதில்லை.

211. பற்றில்லாதவனே நல்லறிவன் : அவன் உலகியலை அறிந்தவனே தவிர , துய்ப்பவன் அல்லன். அத்தகையோன், பாவ வினைக்கட்டைச் சேர்ப்பதில்லை.

212. முற்றும் துறந்த துறவியர், உணவையும் விரும்புவதில்லை,. உணவை அறிபவரே தவிர, சுவைக்க ஆசைப்படுவதில்லை.

213. முற்றும் துறந்த முனிவர், குடிநீரையும் வேண்டுவதில்லை. அதன் மீது பற்றுடையவர் அல்லர்.

214. முழுஞானி என்பார் எப்பொருளையும் விரும்பாதவர் : விருப்பு வெறுப்பென்னும் எவ்வுணர்வும் இல்லாதவர் : குற்றமற்ற நல்லறிவே அவருடைய வடிவம் :

215. நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய பாகுபாடுகள் முழுஞானிக்கு இருப்பதில்லை. எப்பொழுதும் வினை உதயத்திலிருந்து விலகியே இருப்பார்



**206. இன்பம் நிறைவார்வம் ஞானத்தில் உண்டாயின்**
**இன்பம்பே ரின்பமே வாழ்வு**

**207. தன்னுயிரே தன்னுடைமை என்பான் அறிவனவன்**
**அன்னியத்தை நாடுவனோ ஆங்கு**

**208. அன்னியம் தன்னுடைத் தென்பான் அறிவிலியே**
**தன்னுடைத்து நல்லறிவே தான்**

**209. என்னுடலும் பல்பொருளும் இன்றே அழிந்திடினும்**
**என்னுடைத்தே அல்ல அவை**

**210. நல்லறிவன் பற்றற்றான் பார்ப்பவன் மட்டுமே**
**நல்வினையை நாடான் அவன்**

**211. பற்றற்றான் நல்லறிவன் பார்ப்பவனே பாவத்தை**
**விட்டிடுவான் எந்நாளும் தான்**

**212. முற்றும் துறந்தார் உணவும் விரும்பாரே**
**பற்றிலை பார்ப்பவரே தான்**

**213. முற்றும் துறந்தார் குடிநீரும் வேண்டாரே**
**பற்றிலை பார்ப்பவரே தான்**

**214. முழுஞானி எப்பொருளும் எவ்வுணர்வும் வேண்டார்**
**பழுதிலா நல்லறிவ ராம் !**

**215. முழுஞானி இக்காலம் மற்றெதிர் காலம்**
**விழையாது தான்விலகு வார்**

216. தன் துய்ப்பு நிலையும், தான் துய்க்கும் பொருள்களும் ஒவ்வொரு கணமும் அழியக் கூடியவை என்றறிபவனே நல்லறிவன், . எனவே அவன் பற்றிலன் ஆகின்றான்.

217. வினைக்கட்டும், பொருளாசையுமே பிறவிச் சுழற்ச்சிக்கான காரணங்கள் என்றுணர்ந்து விலகுதலே நல்லறிவாகும்.

218. சேற்றில் கிடந்தாலும் பொன், தன்குணத்தை இழப்பது இல்லை. அதுபோலவே உலகில் பலவாறான நிகழ்வுகளின் மத்தியில் அறிவன் வாழ்ந்தாலும் அவனிடத்து ஆர்வம், மயக்கு, கோபம், செருக்கு முதலான திரிபுணர்வுகள் தோன்றுவது இல்லை. அதனால் அவனுக்கு வினைக்கட்டும் இல்லை.

219. சேற்றில் விழுந்த இரும்பு துருப்பிடிக்கும். அதுபோல் பற்று கொண்டவனை வினைக்கட்டும்.

220. தண்ணீரில் வெண்சங்கு பலபொருள்களை உட்கொண்டாலும், வெண்மை நிறத்தில் மாறுவதில்லை.

221. அதுபோன்றே, நல்லறிவன் எப்பொருளை நுகர்ந்தாலும், தன் நல்லறிவை இழத்தலில்லை.

222. சில சூழ்நிலைகளில், வெண்சங்கு, தன்நிறம் மங்கிக் கருமையாகக் கூடும்.

223. அதுபோன்றே, சில சூழ்நிலைகளில், அறிவாளியும், புறப்பொருள் மோகத்தால் பேதையாகின்றான்.

224. அரசனுடைய அவையில் பணிபுரிந்தால், அரசனும் ஊதியம் தருவான்.

225. அதுபோன்றே, உலகியல் சுகம் வேண்டி உழைக்கும் போது, நல்வினைகளால் பல (தற்காலிக) உலகியல் சுகங்களைப் பெறலாம்.

226. அரசவையில் பணிபுரியாத போது அரசன் ஊதியம் தருவதில்லை.



**216. துய்த்தலும் துய்க்கப் படுதலும் தானழியும்**
**துய்த்தல் இலான்அறி வன்**

**217. கட்டும் பொருளாசை யும்பிறவிக் காரணங்கள்**
**விட்டு விலகல் அறிவு**

**218. சேற்றிலும் பொன்குணம் போவதில்லை பற்றிலான்**
**மாட்டும் வினைசேர்வ தில்**

**219. சேற்றில் இரும்பு துருப்பிடிக்கும் பற்றுடையான்**
**மாட்டு வினைக்கட் டுறும்**

**220. வெண்சங்கு தன்நிறம் மாறுமோ தண்ணீரில்**
**உண்டாலும் எண்ணில் பொருள்.**

**221. நல்லறிவன் எப்பொருள் துய்ப்பினும் எஞ்ஞான்றும்**
**நல்லறிவைத் தானிழத்தல் இல்**

**222. வெண்சங்கும் ஏதோ ஒருநிலையில் தன்நிறம்**
**மங்கிக் கருமையா கும்**

**223. நல்லறிவன் தானும் புறப்பொருளால் தன்குணம்**
**நில்லாது பேதையா வான்**

**224. வேந்தன் அவையில் பணிபுரிந்தால் வேந்தனும்**
**வேண்டும் பொருள்தரு வான்**

**225. புறச்சுகம் வேண்டி உழைத்தால் வினைகள்**
**தரும்சுகம் பற்பல வாம்**

**226. வேந்தனிடம் வேலைதான் இல்லாயின் வேந்தனும்**
**வேண்டும் பொருள்தாரா னே**

227. அதுபோன்றே, நற்காட்சியர் உலகியல் சுகம் வேண்டி உழைத்து பாவ வினைகளைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்.

228. நற்காட்சி உடைய உயிர், மெய்ப்பொருள்களில் ஐயம் இல்லாதது : எனவே அது ஏழு வகையான அச்சங்களும் இல்லாதது.

229. யார் ஒருவர், வினைக்கட்டு, மயக்கம், தடை செய்தல் ஆகியவற்றைத் தோற்றுவிக்கும் துவர்ப்பசைகள், பொய்மை, புலனடக்கமின்மை, யோகம் ஆகிய நான்கையும் நீக்குகின்றாரோ, அவரே ஐயம் அற்ற நற்காட்சியாளர் ஆவார்.

230. நிலையற்ற பிறபொருள்களைத் துய்ப்பதில் தீவிர விருப்பம் இல்லாதவர்களே ஆசையை வென்ற நற்காட்சியர் ஆவர்.

231. எதன்மீதும் வெறுப்படையாதவர்களே அருவருப்பில்லா நற்காட்சியர் ஆவர்.

232. வினை உதயத்திற்கு வரும் போது தன் இயல்பில் குன்றாமல் நிற்பவரே மயக்கிலா நற்காட்சியர் ஆவர்.

233. முழுத்தூய்மை பெற்ற சித்த பகவானைப் போற்றி, நல்லறத்தைப் பழிக்காத பான்மையாளரே உத்தம நற்காட்சியர் ஆவர்.

234. நிலை தளர்ந்தாரை நல்லறப்பாதையில் நிலை நிறுத்துவோரே நற்காட்சியர் ஆவர்,

235. அறவோர்களிடம் அன்புசெலுத்தி, மும்மணியை ஏற்றவர்களே நற்காட்சியர் ஆவர்.

236. அறிவு என்னும் தேரில் ஏறி, வினைகளை வெல்லும் நல்லறத்தைப் பரப்புவோர் நற்காட்சியாளர் ஆவர்,

(பாடல் 229 முதல் 236 வரை நற்காட்சியின் எட்டு அங்கங்களான ஐயமின்மை, ஆசையின்மை, அருவருப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழி நீக்கல், அழிந்தாரைத் தாங்கல், அறவோரைப் போற்றுதல், அறம் பரப்புதல் ஆகியவை விளக்கம் பெற்றுள்ளன)



**227. பொருட்சுகம் வேண்டிநற் காட்சியர் யாரும்**
**வெறுவினை யைச்சேரா ரே!**

**228. காட்சி உடைத்தாம் உயிர்ஐயம் தானிலது**
**வாட்டும்ஏழ் அச்சம் இலது**

**229. பொய்மை விரதமின்மை யோகமுடம் நான்கில்லார்**
**ஐயமிலா நற்காட்சி யர்**

**230. மாசுடைப் பல்பொருள் துய்ப்பில் விருப்பில்லார்**
**ஆசையில் நற்காட்சி யர்**

**231. வெறுப்பே எதன்மீதும் தோன்றா நிலையே**
**அருவருப்பில் நற்காட்சி யாம்**

**232. மயங்கிடான் தன்வினையால் தன்இயல்பில் நிற்பான்**
**மயக்கிலா நற்காட்சி யன்**

**233. சித்தரைப் போற்றித் திருவறம் தூற்றிடாப்**
**பத்தரே நற்காட்சி யர்**

**234. தளர்ந்தாரை நல்லறம் தன்னில் நிறுத்தல்**
**வலுவான காட்சியர் மாண்பு**

**235. அறவோ ரிடம்அன்பு மும்மணி ஏற்றல்**
**சிறப்பான காட்சியர் மாண்பு**

**236. அறிவென்னும் தேரேறி வெவ்வினை போக்கும்**
**அறமுரைப்பார் நற்காட்சி யர்!**

## அதிகாரம் 7
## வினைக்கட்டு

237. தூசு படியும் ஓரிடத்தில் ஒருவன் தன் உடலெங்கும் எண்ணெய் பூசி விளையாடினால் அவன் உடலெங்கும் தூசு படிந்திருக்கும்.

238. பசுமையான அல்லது உலர்ந்த தாவரங்களை எண்ணெய் பூசிய உடலோடு ஒருவன் வெட்டும் போது அவன் உடல் அழுக்காகுமன்றோ?

239. அவ்விதம், உடலெங்கும் தூசு படிந்திருக்கும் காரணம் தான் யாது?

240. உடலிலுள்ள எண்ணெய்ப் பசையால் தான், அழுக்கு ஒட்டுகின்றதே ஒழிய, செய்யும் செயல்களால் அன்று.

241. அவ்வாறே, விருப்பு வெறுப்பாகிய பசைகளால், பொய்க்காட்சியின் காரணமாக வினை மாசு வந்தடைகின்றது.

242. எண்ணெய்ப் பசையில்லாத உடலில் அழுக்கு வந்து ஒட்டுதல் அரிது.

243. தாவரங்களை வெட்டுதல் செய்த போதும், பசையில்லா உடலில் தூசு படிவதில்லை.

244. எத்தனை விதமான செயல்களில் ஈடுபட்டாலும் உடலில் பசையில்லாவிடில் அழுக்கு படிவதில்லை.

245. எண்ணெய்ப் பசை உடலில் இல்லையேல் தூசு ஒட்டுதல் இல்லை.

246. அதுபோலவே, துவர்ப்பசைகள் (கஷாயங்கள்) இல்லாத நற்காட்சியர் பல செயல்களைச் செய்கின்ற நிலையிலும், வினைக் கட்டுக்கு ஆளாவதில்லை.

247. பிறரால் தனக்குத் துன்பம் உண்டாகின்றது என்று யார் கருதுகின்றாரோ, அவர் மயக்கம் உடையவர்: அறியாமை உடையவர். அறிவன் அவ்வாறு கருதமாட்டான்.

(தீதும் நன்றும் பிறர்தர வாரா – புறநானூறு)



## அதிகாரம் 7
## வினைக்கட்டு

**237.** **தூசுடை ஓரிடம் எண்ணெய் உடலெங்கும்**
**பூசியாடின் தூசாகும் மெய்**

**238.** **கத்தியால் தாவரங்கள் வெட்டின் பசையுடல்**
**சுத்தமின்றி மாசுறுமன் றோ?**

**239.** **உடலெங்கும் தூசுதான் ஒன்றுபல வாகிப்**
**படிந்திடும் காரணம் யாது?**

**240.** **உடலின் பசையால் அழுக்கு படியும்**
**உடலின் செயல்களால் அன்று**

**241.** **விருப்புவெறுப் பாம்பசை யால்பல் வினைகள்**
**இறுகும்பொய்க் காட்சியி னால்**

**242.** **எண்ணெய்ப் பசையிலா மேனி அழுக்கினைத்**
**தன்னில் இணைப்ப தரிது**

**243.** **தாவரங்கள் வெட்டுதல் செய்தும் பசையின்றேல்**
**ஆவதில்லை மேனி அழுக்கு**

**244.** **பலவாம் செயலாற் றினும்பசை யின்றேல்**
**இலதாம் அழுக்காய் உடல்**

**245.** **எண்ணெய்ப் பசைதான் உடலில் இலதென்றால்**
**ஒண்டுமோர் தூசும் இலை**

**246.** **பசையிலாக் காட்சியர் பல்தொழில் செய்தும்**
**நசிவினைக் கட்டுதல் இல்**

**247.** **துன்புதரு வன்நான் பிறரால் பெறுவனெனல்**
**அஞ்ஞானி யின்பொய் மயக்கு**

248. ஆயுள்வினைக்கேற்பவே மரணம் நிகழும் என்றார் பகவன்: எனவே உன்னால் பிறருக்கு மரணம் ஏற்படாது.

249. உயிர்களுக்கு மரணம் ஆயுள் முடிவதால் ( ஆயுள் வினைக்கேற்ப) உண்டாகும் என்று ஜினபகவான் கூறியுள்ளார். அப்படியிருக்க உன்னைப் பிறரால் எப்படிச் சாகடிக்க முடியும்?

250. என்னால் தான், பிறர் இன்ப துன்பங்களை அடைகின்றனர் என்று கருதுவதும், பிறரால் நான் இன்ப துன்பங்களை அடைந்தேன் என்று கருதுவதும் அறிவிலியிடம் தோன்றும் பொய் மயக்காகும்.

251. ஒவ்வொருவரின் ஆயுளும் அவரவர் ஆயுள் வினைக்கேற்பவே அமையும் என்றருளினார் அருகதேவன். எனவே நான் அவனை வாழவைத்தேன் என்பது தவறாகும்.

252. அதுபோலவே பிறர் தனக்கு வாழ்வளித்தார் என்பதும் தவறேயாகும்.

253. என்னால் தான் மற்றவர்கள் இன்ப துன்பங்களை அடைந்தனர் என்று கூறுபவன் அறிவில்லா மூடனே யாவான்.

254. சுகதுக்கங்கள் அவரவர் வினைகளுக்கு ஏற்பவே உண்டாகின்றன. எனவே உன்னால் பிறர்க்கு அவற்றைத் தரலாகாது.

255. அதுபோலவே பிறரால் உனக்குச் சுகதுக்கங்களைத் தரவியலாது.

256. ஒவ்வொரு உயிரின் இன்பமும் அதனதன் வினையால் அமையுமெனில், உனக்கு யாரால் இன்பம் கொடுக்க முடியும்.

257. துன்பமும் மரணமும் உயிர்களின் வினை உதயத்தால் நிகழ்வனவாகும். நானே அவற்றைத் தந்தேன் எனல் தவறு.

258. துன்பமடையாமை அல்லது இன்பமடையாமை அவ்வுயிரின் வினைக்கேற்பவே நிகழும். அதற்கு நீ எப்படி பொறுப்பாக முடியும்?

259. நானே பிறர்க்கு இன்ப துன்பங்களைக் கொடுப்பேன் என்று கூறுவது அறியாமை. அத்தகைய எண்ணமும் கூற்றும் வினை ஊற்றுக்கே காரணமாகும்.



**248. ஆயுள் வினைமுடிவே சாவென்றார் ஆகாதே**
**சாவுதான் உன்னால் பிறர்க்கு**

**249. ஆயுள் வினைமுடிவே சாவென்றார் ஆகாதே**
**சாவு பிறரால் உனக்கு**

**250. என்னால் பிறரும் பிறரால்தான் யானுமென்ப**
**அஞ்ஞானி யின்பொய் மயக்கு**

**251. அவராயுள் அவ்வவரால் என்றார் பகவன்**
**தவறாகும் தந்தேன் எனல்**

**252. அவராயுள் அவ்வவரால் என்றார் பகவன்**
**தவறாகும் தந்தார் எனல்**

**253. தன்னால் பிறர்க்கே சுகதுக்கம் என்பானோர்**
**மூடனே ஞானியல் லன்**

**254. துக்கம் வினைஉதயம் தன்னால் பிறர்க்குநீ**
**துக்கம் தரலாகா தே !**

**255. துக்கம் வினைஉதயம் தன்னால் பிறருனக்கே**
**துக்கம் தரலாகா தே!**

**256. அனைத்துயிர் இன்பம் அவற்றின் வினையால்**
**உனக்கின்பம் யார்கொடுப் பார்?**

**257. துன்பம் மரணம் வினைஉதயம் நானேதான்**
**தந்தேன் எனின்த வறு**

**258. துன்புறாமை இன்புறாமை அவ்வுயிர் தன்வினையால்**
**எங்ஙனம் நீதான் பொறுப்பு**

**259. ஆக்குவேன் இன்பதுன்பம் என்ப அறியாமை**
**ஆக்கு மதுவே வினை**

260. நானே பிறர்க்கு இன்ப துனபங்களைக் கொடுத்தேன் என்பது மயக்கமாகும். அம் மயக்கம் வினை ஊற்றுக்குக் காரணமாகும்.

261. வாழ்வும் மரணமும் என்னால் தான் என்று கூறுவது மயக்கமே. அத்தகைய மயக்கம் வினை ஊற்றுக்குக் காரணமாகும்.

262. கொலையை நீ செய்தாலும், செய்யாத போதும், கொலை, செய்யவேண்டும் என்ற எண்ணமே வினைக் கட்டிற்குக் காரணமாகும்.

263. பொய், திருட்டு, காமம், வஞ்சனை முதலானவற்றால் பாவ வினைக் கட்டுண்டாகும்.

264. உண்மை, மிகுபொருள் விரும்பாமை மயக்கமின்மை முதலானவற்றால் புண்ணியவினை உண்டாகும்.

265. வினைக்கட்டுக்கு உயிரின் திரிபுணர்வுகள் தான் காரணமே தவிர, பிறபொருள்கள் அல்ல.

266. நானே சுகதுக்கங்களைக் கொடுக்கும் வல்லமையும், தடுக்கும் வல்லமையும் உடையவன் என்ற எண்ணம் தவறானது. வீணானது.

267. பவ்வியனே ! உன்னால் பிறவற்றின் வினைகளை ஆக்க முடியுமென்றால், அவ்வுயிர்கள் முக்தி யடையும்போது உன் செயல் தான் ஒன்றுண்டோ? எண்ணிப்பார்!

268. ஒருயிர் தன்னிடம் தோன்றும் மயக்க உணர்வுகளால் தான் நாற்கதிகளில் சுழலுவதற்குக் காரணமான இருவினைகளையும் ஈட்டுகின்றது.

269. மயக்க உணர்வினால் தான் ஒருயிர், உயிரற்ற, தன்மம் அதர்மம் முதலான பொருள்களையும் தானென்று கருதுகின்றது.

270. மயக்கம் நீங்கிய முனிவர் , புண்ணிய பாவ வினைகளைச் சேர்த்துக் கொள்ளுவதில்லை.

271. எண்ணம், முடிவு, அறிவு, சிந்தனை, உணர்வு பாவம் என்னும் பல சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பனவே வாகும்.



**260. ஆக்குவேன் இன்பதுன்பம் என்ப மயக்கமே**
**ஆக்கு மதுவே வினை**

**261. மயக்கமே வாழ்வுசாவு என்னால்தான் என்ப**
**மயக்கமே ஆக்கும் வினை**

**262. கொலைநீ புரியினும் இல்லெனினும் தோன்றும்**
**கொலையுணர்வால் கட்டும் வினை**

**263. பொய்களவு காம மயக்குதான் பாவவினை**
**உய்க்கும் உயிரில் இணைந்து**

**264. உண்மை மிகுபொருள் நண்ணாமை வாய்மைதான்**
**புண்ணியம் சேர்க்கும் மயக்கு**

**265. பொருள்களால் உண்மையில் கட்டில்லை தோன்றும்**
**விருப்பத்தால் ஆவதே கட்டு**

**266. நானே கொடுப்பவன் நானே தடுப்பவன்**
**வீணேயவ் வெண்ணம் தவறு**

**267. உன்னால் அவற்றின் வினையென்றால் முக்தியில்**
**உன்செயல் தானுண்டோ சொல்**

**268. மயக்க உணர்வினால் நாற்கதித் துன்பம்**
**பயக்கும் இருவினைகள் தாம்**

**269. உயிரில் பொருளையும் ஒருயிர் தானாய்**
**மயக்க உணர்வால்எண் ணும்**

**270. எம்முனிவர் ஓர்மயக்கம் இல்லவரோ அம்முனிவர்**
**சேர்ப்பதில்லை புண்ணியபா வம்**

**271. எண்ணம் முடிவறிவு சிந்தனை உணர்வுபாவம்**
**என்னும்சொற் கள்பொருளால் ஒன்று**

272. முன்னுரைத்தவை யாவும் உலகியலில் கூறப்படுவனவாகும். உணமை நயத்தை ஏற்பதனாலேயே சாதுவர் முக்தியடைகின்றனர்.

273. உண்மையற்ற ஒழுக்கம், தவம், சமிதி, குப்தி, விரதம் முதலான யாவும் வீணான பொய்மை மூடமே யாகும்.

274. நன்னம்பிக்கை இல்லாமல் எத்தனை நூல்களைப் பயின்றாலும் பயனில்லை.

275. உலகில் கிடைக்கும் புகழ்ச்சி, மகிழ்ச்சி, பெருமை முதலானவைகளுக்காக அறச் செயல்களைப் புரிவதால் வினைக்கட்டு ஒருபோதும் விலகாது.

276. ஆசாரங்கம் முதலான நூல்களைக் கற்றலே அறிவு என்றும் , உயிர் முதலானவற்றை ஏற்றலே காட்சி என்றும், உயிரைப் போற்றுவதே ஒழுக்கம் என்றும் கூறப்படுவது வழக்கு நயமாகும்.

277. என் உயிரே அறிவு : என்னுயிரே காட்சி : என்னுயிரே ஒழுக்கம்: என்னுயிரே விடுதலை வடிவம் : என்னுயிரே செறிப்புடையது : என்னுயிரே தியானம் என்பது உண்மைச்சுட்டு ஆகும்.

278. பளிங்கு தன் இயல்பில் நிறமற்றது. ஆனால் பிற பொருள் சேர்கையால் செம்மை நிறமாதல் காணலாம்.

279. அதுபோன்று, பிறபொருள் மோகத்தால் நல்லறிவனும் ஆசைவயப்பட்டு தன்நிலை மாறி, துன்ப மடைகின்றான்.

280. நல்லறிவன், விருப்பு, வெறுப்பு, காமம், முதலான துவர்ப்பசைகளில் தானாக மூழ்காத போது, அவ்வுணர்வுகளுக்குத் தான் கர்த்தா ஆவதில்லை.

281. ஆனால் மேற்கூறிய குற்றங்களில் மூழ்கும் மூடர்கள் வினைக்கட்டுக்கு ஆளாகின்றனர்.

282. விருப்பு, வெறுப்பு, நாற்பசை உதயம் தோன்றினால் வினைக்கட்டுண்டாகும்.



**272.** **முன்னுரைகள் யாவும் உலகியலே சாதுவர்**
**உண்மை நயத்தினால் வீடு**

**273.** **பான்மையில் சீலம் தவம்சமிதி நோன்புகுப்தி**
**வீண்பொய்மை மூடமே யாம்**

**274.** **நம்பிக்கை யின்றிப் பலநூல் பயின்றாலும்**
**இம்மியும் உண்டோ பயன்?**

**275.** **உலகின்பம் நோக்கித் தருமம் புரியின்**
**விலகாது வெவ்வினைக் கட்டு**

**276.** **கற்றலே ஞானம்நம் பிக்கையே காட்சிசீலம்**
**வற்றாநல் லன்பே வழக்கு**

**277.** **உண்மை நயத்தில் உயிரேதான் மும்மணி**
**சம்வரை யோக மெலாம்**

**278.** **நிறமில் பளிங்குதான் செம்மையாய் மாறும்**
**பிறபொருள் சேர்க்கை விளைவு**

**279.** **அன்னியம் சேர்வதால் நல்லறிவன் ஆசைகள்**
**தன்னில் கலப்பதே மாற்று**

**280.** **தானாக ஞானிசெய்யான் காமவாசை நாற்பசைகள்**
**தானாகான் கர்த்தா உணர்வு**

**281.** **நாற்பசை காமவாசைத் தோற்றத்தால் மூடர்கள்**
**சேர்ப்பரே வெவ்வினைக் கட்டு**

**282.** **விருப்புவெறுப் போடு பசையுதயம் தோன்றின்**
**இறுகும் உயிர்தன்னில் கட்டு**

283. தன் தவறுக்கு வருந்தாமை, விரதமின்மை ஆகியவை ஒவ்வொன்றும் இரண்டு வகைப்படும். அவற்றிற்குத் தூய உயிர் கர்த்தா ஆவதில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

284. மேற்கூறிய இரண்டும் உணர்வாலும் செயல்களாலும் என இருவகைப்படும். அவற்றிற்குத் தூய உயிர் உபாதானம் ஆவதில்லை.

285. தன் உணர்வில் உண்டாகும் குற்றம், நோன்பின்மை, உறுதியின்மை, ஆகியவற்றால் ஏற்படும் மாற்றங்களுக்கும், வினைக்கட்டுக்கும், அவ்வுயிரே உபாதானமாகும்.

286. நல்வினை, தீவினை ஆகிய யாவுமே புத்கலச் செயல்களாகும். தூய உயிர் அவற்றைச் செய்வதில்லை.

287. புத்கலங்கள் உயிரற்றவை. உயிரற்ற புத்கல வினைகள் உயிரின் செயல்களாய் ஆவதில்லை.

## அதிகாரம் 8
## வீடுபேறு

288. பலநாட்களாக விலங்கினால் பூட்டப்பட்ட ஒருவன், அதனால் உண்டான துன்பங்களை அறிவான்.

289. அவ்விலங்கை அவன் உடைத்தாலன்றி அவனுக்குத் துன்ப விடுதலை இல்லை ( தன் முயற்சியினாலன்றி விடுதலை இல்லை)

290. அதுபோன்றே வினைகளாகிய விலங்கால் கட்டுண்ட ஒருவன், துன்பங்களை அறிந்திருப்பினும், அவற்றை உடைத்தாலன்றி, அவனுக்குப் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை இல்லை.

291. எண்ணம் மட்டுமே விடுதலையைத் தராது என்பதை உணர்தல் வேண்டும்.

292. சங்கிலியை அறுத்தல் போன்றே உயிரில் தங்கிய வினைக்கட்டை அறுத்தலே வீடு பேறாகும்.



**283.** **தானிரங்கல் ஓர்விரத மின்மை வகையிரண்டே**
**தானில்லை மூலம் அதற்கு**

**284.** **முன்னிரண்டும் தன்னுணர்வால் தன்செயலால் அவ்வகையாம்**
**தன்னுயிர் தானிலைமூ லம்**

**285.** **தன்னுணர்வில் தன்குற்றம் நோன்புறுதி தானின்மை**
**தன்வினைக் கேமூல மாம்**

**286.** **தீவினை நல்வினை புத்கலத்தின் செய்கையாம்**
**மேவுமோ தூய உயிர்**

**287.** **உயிரிலாப் புத்கலமே யாம்வினைகள் ஆமோ**
**உயிரின் செயல்களாய் தாம்**

## அதிகாரம் 8
## வீடுபேறு

**288.** **பன்னாள் விலங்குத் தளைப்பட்டான் தானறிவன்**
**துன்ப மிகுதி குறைவு**

**289.** **விடுபடத் தன்முயற்சி இல்லாயின் பன்னாள்**
**கிடப்பன் விலங்கின் சிறை**

**290.** **வினைக்கட்டின் தன்மை அறிந்திடினும் தூய்மை**
**தனையெய்தல் என்றும் அரிது**

**291.** **எண்ணம் இருந்தால் விடுதலை கூடுமோ**
**தன்விருப்பம் தான்தருமோ வீடு?**

**292.** **சங்கிலி யைத்தான் அறுத்தல்போல் ஆங்குயிர்**
**தங்கிய கட்டறுத்தால் வீடு**

293. வினையின் இயல்பையும் தன் உயிரின் இயல்பையும் நன்குணர்ந்தால், விடுதலை பெற வேண்டும் என்னும் முனைப்பான உறுதியிருந்தால், முக்தி வாய்க்கும்,

294. அந்நிலையில் உயிரும் வினைகளும் நல்லறிவு என்னும் சிற்றுளியால் வேறு வேறாகப் பிரிக்கப்படுகின்றன.

295. உயிரும் வினையும் தத்தம் இயல்பால் முற்றிலும் வேறுபட்டவை என்பதை உணர்தல் வேண்டும்.

296. தூய உயிரை அடைதல் என்பதே அவ்விரண்டின் வேறுபாட்டை அறிதலாகும்.

297. உயிரும் உலகின் பிற பொருள்களும் வேறு வேறே என்று பிரித்தறிதலே நிச்சயநோக்கு. பிரித்தறியாமையே பொய்க்காட்சி.

298. எனவே தன்னுயிரைப் பிற பொருள்களிலிருந்து பிரித்தறிதலே ஞானம்.

299. அறிவே உயிர்: உயிரே அறிவு. உயிரற்ற பிற பொருள்கள் அறியும் திறம் அற்றவை.

300. உயிரின் தூய தன்மையையும், புறப்பொருள்களின் தொடர்பால் உயிரில் வினைத்தொடர்பு ஏற்படுகின்றது என்பதையும் நன்குணர்ந்த அறிவன், புறப்பொருள்களைத் தன்னுடையவை என்று கூறுவானோ? (கூறமாட்டான்)

301. திருடுதல் முதலான குற்றங்களைச் செய்தவன் பிடிபட்டு விடுவோமோ என்று அச்சம் கொண்டிருப்பான்.

302. குற்றமேதும் செய்யாதோர்க்கு எவ்வித அச்சமும் இல்லை அல்லவா?

303. அவ்வாறே, தீமை புரிபவர், வினைகளின் வருகையை எண்ணி அஞ்சுவர். குற்றம் புரியாதவர் அஞ்சுவதில்லை.



**293.** **வினையியல்பு தன்னியல்பு தானுணர்ந்தால் நெஞ்சின்**
**முனைப்புறுதி வீடு தரும்**

**294.** **வேறுவேறாம் பண்புடைக் கட்டும் உயிரும்தான்**
**வேறுவேறாம் ஞானவா ளால் !**

**295.** **தத்தம் இயல்பால் முரணாம் இரண்டுமெனச்**
**சுத்த உயிரே உணர்**

**296.** **தூய உயிரை அடைதலென்ப அவ்விரண்டின்**
**ஆய குணமறித லாம்**

**297.** **தன்னுயிரும் பல்பொருளும் வேறுவேறே என்றறிதல்**
**உண்மையாம் பொய்யே பிற**

**298.** **பிரித்துணர்தல் வேண்டும் உயிரை ஒருவன்**
**பிறபொருள் அல்லதன தென்று**

**299.** **அறிவ தெதுவோ அதுவே உயிராம்**
**அறியாதே வேறே பொருள்**

**300.** **கூறுவனோ தூய்மை உணர்வான்தான் வேறுணர்வே**
**தன்பொருள் தானென்றே சொல்**

**301.** **திருட்டு முதலாம் பெருங்குற்றம் செய்வான்**
**உறுவான் பிடிபடுமச் சம்**

**302.** **குற்றமே தும்தாம் புரியார் உறுதலுண்டோ**
**அச்ச உணர்வே உளத்து**

**303.** **அஞ்சுவர் தீங்குதான் செய்வார் வரும்வினைக்கே**
**அஞ்சிடார் குற்ற மிலார்.**

304. நன்மை அடைதல், நிறைவு பெறுதல், தன்னைத் தான் அறிதல் முதலானவை ஒரே பொருளுடையனவாகும். எவ்வுயிர் குற்றமுடைத்தோ, அவ்வுயிர் தூய்மையில் இல்லை.

305. குற்றமில்லா உயிர்க்கு அச்சமில்லை. அவ்வுயிர் தன் தூய்மையால் பேரின்பம் பெற்றிடும்.

306. தன்னையே நிந்தித்தல், போற்றுதல், கழுவாய், ஒருநிலையில் நிற்றல், மன அடக்கம், தூய்மையாதல், மன்னிப்பு கோருதல், தீமை விலகல் ஆகிய எட்டும் “ தான் செய்கிறோம்” என்ற எண்ணத்தால் நஞ்சுக்குடம் போலாம்.

307. முன்கூறிய எட்டும் இல்லா நிலை, அமுத கலசமாகும், ஏன் எனில் அந்நிலையில் உயிருக்கு, “ நான் செய்கிறேன்” என்ற கர்த்தா உணர்வு இல்லை.

## அதிகாரம் 9
## முழு தூய அறிவு

308. பொன், வளையல் முதலான அணிகலன்களாக ஆனாலும், அது தன் குணத்தில் மாறுபடுவதில்லை. அதுபோன்றே எப்பொருளும் தத்தம் குணங்களிலிருந்து மாறுபடுவதில்லை.

309. அதுபோன்றே உயிரும் உயிரற்ற பொருள்களும் தத்தம் இயல்புகளிலிருந்து பிரிவதில்லை என்று ஆகமங்கள் கூறுகின்றன.

310. உயிர், எதிலிருந்தும் தோன்றுவதில்லை. உண்மையில் அது வேறு எதையும் தோன்றச் செய்வதும் இல்லை. அதனால் அது எதனுடைய காரியமும் அன்று. எதனுடைய காரணமும் அன்று.

311. உயிருடன் வினை வந்து கலப்பதற்கு உயிரே தான் மூல காரணம். அதுபோன்றே புத்கலப் பொருள் வினையாக மாறுவதற்கு அப்பொருளின் தன்மையே காரணமாகும்.

312. உயிர், வினைகளால், தன்நிலை கெட்டுத் துன்புறுகின்றது. அத்தகைய வினை ஊற்றும், உயிரின் திரிபுணர்வால் தான் நிகழ்கின்றது.

313. ஒன்றுக்குப் பிறிதொன்று நிமித்தமாகின்றது. வினைக் கலப்பால், உயிர் பிறவிச் சுழலில் சிக்கி விடுகின்றது.



**304.** **நன்மை நிறைவுதன்னைத் தானறிதல் யாவுமொன்றே**
**தன்குற்றம் மாசுடைத்தே யாம்**

**305.** **குற்றமில்லா ஒருயிர்க் கச்சமிலை தூய்மையால்**
**பெற்றிடும் பேரின்பம் தான்**

**306.** **நிந்தனைபோற் றல்கழுவாய் நிற்றலடக் கம்தூய்மை**
**மன்னிப்பு தீங்கறுத்தல் நஞ்சு**

**307.** **அந்நஞ்செட் டின்மை அமுத கலசமாம்**
**அன்னியம் என்பான் தனக்கு**

## அதிகாரம் 9
## முழு தூய அறிவு

**308.** **தங்க வளையல் அதன்குணத்தில் நிற்பதுபோல்**
**தங்கும் பொருளில் குணம்**

**309.** **உயிரும் உயிரிலதும் தத்தம் குணத்தின்**
**நியதிமாறா தென்றுரைக்கும் நூல்**

**310.** **ஆகாதே ஒருயிர் மற்றொன்றின் ஆக்கமாய்**
**ஆக்குவதில் அஃதும் பிற**

**311.** **வினைதன் னுடன்கலக்கத் தானேதான் கர்த்தா**
**வினையின்கர்த் தாவும் வினை**

**312.** **வெவ்வினை யாலுயிர்ச் சீரழியும் அவ்வினையும்**
**அவ்வுயிர் தன்திரிபால் தான்**

**313.** **ஒன்றுக்கொன் றேநிமித்தம் அவ்விரண்டின் கட்டினால்**
**உண்டாம் பிறவிச் சுழல்**

314. வினைத் தொடர்பு முற்றும் விலகாதவரை, உயிர் மும்மணி வடிவமானது என்ற நிலையும் இல்லாமற் போகும்.

315. எப்பொழுது உயிர், வினை, விளைவுகளை முழுதும் விலக்கிவிடுகின்றதோ, அப்போது அவ்வுயிர் மும்மணியின் வடிவமாகி விடுகின்றது.

316. முன்வினைப்பயனை அறிவிலியே நுகர்கின்றான். நல்லறிவன் பார்ப்பவனாக மட்டுமே உள்ளான். நுகர்வதில்லை.

317. நச்சுப்பாம்பு, இனிப்புகலந்த பாலைக் குடித்தாலும் தன் நச்சுத்தன்மையை விடுவது இல்லை : அதுபோன்றே, வீடுபேறு பெறத் தகுதியில்லாதவன், மெய்நூல்கள் பலவற்றைக் கற்றாலும், பிறவியில் உழலும் நிலையிலிருந்து விடுதலை பெறுவதில்லை.

318. அறிவன் வீடுபேறு அடையவேண்டும் என்னும் உறுதி உடையவன். இன்பம், துன்பம் முதலான முன்வினைப்பயன்களை அறிவன் அறிவான். ஆனால் அவன் அவற்றைத் துய்ப்பதில்லை என ஜினர் அருளியுள்ளார்.

319. நல்லறிவன் பல்வகைப்பட்ட வினைகளை யாக்குவதும் அவற்றின் பயனை நுகர்வதும் இல்லை: பார்ப்பவனாக மட்டுமே அவன் உள்ளான்.

320. கண்கள் பொருள்களைக் காணும் கருவிகளாக உள்ளன. அக்கண்கள் எப்பொருளையும் ஆக்குவதில்லை. துய்ப்பதுமில்லை. ஞானமும் அது போன்றுதான் .

321. திருமால் உலகைப் படைக்கின்றான் என்பர் சிலர். ஆறுவித உடல்களை உயிர் பெற்றுள்ளது என்பர் சாதுக்கள்.

322. அவ்வாறு உலகமக்களும் சாதுவரும் கூறுகின்ற மொழிகளில் முக்கிய வேற்றுமை தான் உண்டோ?

323. படைப்புச் செயல் என்பது உண்மையாயின் உயிர்கள் முக்தியடைதல் என்பது தான் ஏது?



**314. வினைத்தொடர்பு தான்வில காதவரை தன்னில்
மணிமூன்றும் இல்லான் உயிர்**

**315. வினைப்பயனைத் தான்முழு தும்விடும் போதே
மணிமூன்றின் வண்ணம் உயிர்**

**316. பேதை நுகர்வான் பழவினைத் தாக்கமே
மேதை அறிபவனே தான்**

**317. பால்தான் பருகினும் நஞ்சுவிடாப் பாம்புபோல்
நூல்கற்றான் தீயன் குணம்**

**318. நல்லுறுதி கொண்டறிவன் நற்பயன் தீங்கறிவான்
இல்லை நுகர்தல் அவன்**

**319. பல்வினை யாக்கலும் துய்த்தலும் இல்லானே
நல்லறிவன் பார்ப்பவனே யாம்**

**320. காணும்கண் கள்பொருள் ஆக்கம் நுகர்வுமிலை
ஞானம் அதுபோன்றே தான்**

**321. திருமால் படைப்பென்பார் உண்டுயிர் ஆக்கம்
அறுவுடல் என்பார் முனி**

**322. மக்களும் சாதுவரும் செப்பும் வகையிரண்டில்
முக்கிய வேறுபாடுண் டோ?**

**323. படைப்புச் செயலுண்மை யாயின் உயிர்கள்
விடுதலை காணுதல் ஏது?**

324. பிறபொருள்களைத் தம் பொருளென உரிமை கொண்டாடுவோர் அறிவிலிகள். அது உலகியல் நோக்கு. உண்மையில் ஓரணுவும் உயிருக்குச் சொந்தமாகாது.

325. மோக உணர்வினால், நாடு, நகரம், வீடு முதலானவற்றை மக்கள் தம்முடைத்தென்கின்றனர். அக்கூற்று உண்மையாகாது.

326. பிறபொருள்களைத் தம்முடையவை என்பார், அறிவு மயங்கிய பொய்க் காட்சியரே யாவர்.

327. பிற பொருள்களைத் தம்முடையனவாகக் கருதுவோரை, நற்காட்சி யற்றவராகவே நல்லறிவர் கருதுவர்.

328. மோகனீய வினை, உயிரைப் பொய்க்காட்சியுடையதாகச் செய்கிறது என்றால், உயிரற்ற வினை பொய்க்காட்சியின் கர்த்தா ஆகிவிடும். அவ்வாறு கருதுதல் தவறு.

329. உயிரே, புத்கலத்தைப் பொய்க் காட்சியுடைத்தாக்கும் என்றால், புத்கலமும் பொய்க்காட்சியுடையதாகிவிடும். உயிரற்ற புத்கலம் எப்படிப் பொய்க்காட்சி உடையதாகும்?

330. உயிரும் அணுத்திரள்களும் சேர்ந்து புத்கலத்தைப் பொய்க்காட்சியுடையதாக்கும் என்றால், உயிரோடு, புத்கலமும் சேர்ந்து தானே, வினைப்பயனைத் துய்க்கவேண்டும்? எனவே அது தவறு.

331. புத்கலம் தானாகவே பொய்க்காட்சியுடைய தாகும் என்று கூறுவதும் தவறு. ஏன் எனில் பொய்க்காட்சி என்பதே உயிரின் நிகழ்வு அல்லவா?

332. அறிவுடைமை, அறிவின்மை, தூக்கம், விழிப்பு முதலான யாவும் வினைகளால் விளைவன என்பது உலகியல் நோக்கு.

333. இன்பமும் துன்பமும் மெய்ம்மையும் பொய்மையும் நல்லொழுககமும் தீயொழுக்கமும் முன்வினைப்பயனே என்பதும் பொய்யான உலகியல் வழக்கு.



**324. பிறபொருள் தம்முடைத்தாய்க் காணுவர் மூடர்
உரித்தல்ல ஓரணுவும் ஈங்கு**

**325. தன்னுடைத் தென்கின்றார் நாடுநக ரம்வீடு
உண்மை அறியாமோ கம்**

**326. பிறபொருள் தன்னுடைத் தென்பார்தாம் யாரும்
அறிவில்பொய்க் காட்சி யரே**

**327. பிறவற்றைத் தம்முடைத்தாய் எண்ணுவரை ஞானி
கருதுவர் காட்சியில ராய்**

**328. மோகவினை தன்இயல்பால் பொய்க்காட்சி யாக்குமேல்
ஆகுமே கர்த்தா அதற்கு**

**329. புத்கலத்தை ஒருயிர் பொய்க்காட்சி யாக்குமேல்
புத்கலமும் பொய்க்காட்சி யாம்**

**330. புத்கலத்தை ஒருயிரும் மற்றணுவும் பொய்யாக்கின்
புத்கலத்தோ டவ்வுயிரும் துய்ப்பு**

**331. புத்கலம் தானாகப் பொய்மை யுறுவதில்லை
அத்தன்மை ஒருயிரின் பாங்கு**

**332. ஞானமூடம் தூக்கவி ழிப்பெலாம் வல்வினையால்
ஆனவே என்ப வழக்கு**

**333. இன்பதுன்பம் பொய்மை ஒழுக்கம் பழவினை
தந்ததென்ப வும்பொய் வழக்கு**

334. உயிரின் மூவுலகப் பிறவிச் சுழற்சி, முன்வினையால் அமையும் என்பதும் பொய்மை வழக்குத்தான்.

335. இன்ப துன்பங்களைக் கொடுப்பதும் நீக்குவதும் வலிமையான வினைகளே என்பதும், உயிரின் சிறப்பை மறந்து கூறப்படும் உலகியல் கூற்றே ஆகும்.

336. முன்வினைப் பயனால் தான் ஆணும், பெண்ணும் காமத்தில் திளைப்பர் என்று நம் நூல்கள் கூறுகின்றன.

337. பவ்வியர்களே ! அனைத்துக்கும் காரணம் வினைகளே என்றால், முனிவர்களாய்த் துறவேற்பார் யார் என்று எண்ணிப் பாருங்கள்.

338. கொலை செய்தலுக்கும், செய்யப்படுவதற்கும் வினைமேல் பழி போடுகின்றனர் ! இது சரியா என எண்ணுங்கள் !

339. அனைத்தையும் ஆக்குவதும் அழிப்பதும் வினைகளே என்றால், உயிரின் செயல்தான் என்ன? எண்ணுங்கள்!

340. சாங்கிய நெறியினர் கூறும் வினையைப் பழிக்கும் நிலையை ஏற்றுக் கொண்டால், உயிரின் ஆற்றல் தான் உண்டோ?

341. தன்னுயிரே தான், தன்னைப் புத்கலவினை என்னும் பொருள் வடிவமாக்குமென்றால் அது பொய்யுரையாகும்.

342. உயிரானது அளவற்ற இடப்பரப்பும் அழிவில்லாக் குணமும் உடையது.

343. உயிரின் விரிவு உலகளவு ஆகும். அதைப் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ ஆக்குதல் ஆகாது.

344. அறிவுடைமை உயிரின் இயல்பாகும். என்றாலும் ஒருயிர்க்கு அவ்வுயிரே குருவாகும்.

345. உயிர் அழியும் என்றும் அழியாது என்றும் செய்யும் என்றும் செய்யாது என்றும் பலவாறாகக் கூறப்படுவது ஏகாந்த வாதமாகும்.



**334.** **முன்வினையால் போகும் உயிர்மூ வுலகெங்கும்**
**என்பதே பொய்மை வழக்கு**

**335.** **வல்வினை யேகொடுக்கும் வாங்கும் எனவழக்கில்**
**சொல்வர் உயிரை மறந்து**

**336.** **பெண்ணொடு ஆணும்தான் காமுறவே பண்ணுமென**
**வல்வினையைச் சொல்லுமே நூல்**

**337.** **வினையே அனைத்துமுண் டாக்குமேல் யார்தான்**
**முனிவரா யாவர் விளம்பு**

**338.** **கொலைசெய்தல் செய்யப் படுதல் இரண்டின்**
**நிலைக்கும் வினைமேல் பழி**

**339.** **வினையே அழித்தலாக்கல் செய்யின் உயிரின்**
**பணிதான் உலகினில் ஏது?**

**340.** **சாங்கியம் கூறும் வினைமேல் பழிஏற்பின்**
**ஆங்குண்டோ ஆற்றல் உயிர்க்கு**

**341.** **தன்னுயிரே தன்னைப் பொருள்வடி வாக்குமெனில்**
**உண்டாங்கே பொய்மை மயக்கு**

**342.** **ஓரள வில்லா இடப்பரப்பே எவ்வுயிரும்**
**ஓரழி வில்லாக் குணம்**

**343.** **விரியுமே ஒருயிர் இவ்வுல கெங்கும்**
**பெரிதுசிறி தாக்கலாகா தே**

**344.** **ஞானம் உயிரின் இயல்பெனினும் ஒருயிர்**
**தானே தனக்குக் குரு**

**345.** **அழியுமழி யாதுயிர் செய்யுமது செய்யா**
**மொழியெலாம் ஏகாந்த மாம்**

346. உயிர், ஒருநிலையில் அழிந்து மறுநிலையில் தோன்றும் எனவும் உயிர் அழிவதே இல்லை என்றும் தன்வினைப் பயனை நுகரும் என்றும் நுகராது என்றும் கூறுவதெல்லாம் ஒருமுனை நோக்கே யாகும்.

347. உயிர், செய்யும் ஆனால் அதன் பயனை அவ்வுயிர் நுகராது என்று கூறுவது உண்மையறியாப் பொய்க்கூற்றாகும்.

348. யாரோ ஒருவர் செயல்புரிகின்றார் : வேறுயாரோ ஒருவர் பயன் நுகருகின்றார் என்று கருதுவது அருக நெறிக்கு முரண்பட்டது.

349. பொற்கொல்லர் நகைகளைச் செய்கின்றார். ஆனால் அவர் அவற்றோடு ஒன்றிவிடுவதில்லை. அது போலவே உயிரும், அறிவு மறைப்பு முதலான வினைக்கட்டுக்குக் காரணமான செயல்களைச் செய்கின்றது. என்றாலும் அவ்வுயிர் அவ்வினைகளோடு இரண்டறக்கலந்து விடுவதில்லை.

350. பல கருவிகளைக் கொண்டு, பலவிதமான பொருள்களைத் தொழிலாளி செய்கின்றான். ஆயினும் அவன் அக்கருவிகளாக மாறுவது இல்லையல்லவா?

351. அவ்வாறே, தொழிலாளி, அத்தொழிலாகவே மாறுவதும் இல்லை.

352. அதுபோன்றே ஒருயிர் தன்வினையைத் தானே ஆக்கும் என்றாலும் அவ்வுயிர் இன்ப துன்பமாய் மாறாது.

353. உலகியல் நோக்கினைக் கூறினோம். இனி உண்மை நோக்கைக் காண்போம்.

354. கலைஞன், தன் கலையில் மனம் ஒன்றி நிற்பது போன்றே, உயிரும் ஆசையிலும் வெறுப்பிலும் ஒன்றிவிடுகிறது.

355. தன் வேலையைச் செய்யுங்கால் ஒருவன் துன்பப்பட வேண்டியுள்ளது. அது போன்றே உயிரும், தன் செயலால் துன்புறுகின்றது.



**346. அழிவுமின்மை தானும் நுகர்வும் பிறவும்**
**மொழிதல் ஒருமுனை நோக்கு**

**347. ஒருயிர் செய்யும் நுகராதென் றேபொய்மை**
**கூறுவர் ஓரார் நெறி**

**348. செய்வாரும் துய்ப்பாரும் வேறுவேறென் பார்மூடர்**
**மெய்நெறி தான்அறி யார்**

**349. பல்பொருள் ஆக்கும் தொழிலாளி யாவனோ**
**பல்பொருளாய் மாறும் வடிவு**

**350. கருவிகள் கொண்டே பொருள்பல செய்வான்**
**கருவியாய் ஆவனோ தான் !**

**351. பொருள்பல செய்யும் ஒருவன் செயலாய்**
**மருவுதல் இல்லையே தான்**

**352. ஒருயிர் தன்வினையைத் தானாக்கும் ஆயினும்**
**மாறாதே இன்பதுன்ப மாய்**

**353. உலகியல் நோக்குரைத்தோம் உண்மை நயத்தை**
**விளக்குவோம் காண்க இனி**

**354. ஒன்றுபடும் ஓர்கலைஞன் போன்றே உயிரும்தான்**
**ஒன்றுபடும் ஆசை வெறுப்பு**

**355. தன்வேலை தான்செய்யுங் கால்ஒருவன் துன்புறுவன்**
**துன்பம்தான் தன்னால் உயிர்க்கு**

356. சுண்ணாம்பு சுவரை வெண்மையாக்குகின்றது. ஆயினும் சுண்ணாம்பின் குணமும் சுவரின் குணமும் வேறு வேறானது. அதுபோன்றே வினைகளால் உயிர் அழுக்கடைந்தாலும் உயிரின் இயல்பும் வினைகளின் இயல்பும் வேறு வேறானவையே, என்றறிவான் அறிவன்.

357. சுண்ணாம்பு தன் குணத்தில் நிற்பது போல் நல்லறிவரும் தன் நிகழ்வுகளைக் காண்பவராகவே நிலைத்து நிற்பர்.

358. சுண்ணாம்பு தன் குணத்தில் நிற்பது போல் நல்லொழுக்க சீலரும் தன் ஒழுக்கத்தில் நிலைத்து நிற்பர்.

359. சுண்ணாம்பு தன் குணத்தில் நிற்பது போல் நற்காட்சியாளரும் தம் இயல்பில் நிலைத்து நிற்பர்.

360. இதுவரை சொல்லிய மூன்றும் நிச்சய நோக்காகும். இனி உலகியலைச் சொல்லுவோம்.

361. சுண்ணாம்பின் தன்மையால் சுவர் வெண்மை நிறமாகின்றது. அதுபோல் உயிர் தன்னுடைய அறிவுடைமைப் பண்பினால், பிற பொருள்களை அறிகின்றது.

362. சுண்ணாம்பின் தன்மையால் சுவர் வெண்மையாதல் போன்று உயிர் தன்னுடைய இயல்பினால் பிறபொருள்களைப் பார்க்கின்றது.

363. சுண்ணாம்பின் தன்மையால் சுவர் வெண்மையாதல் போன்று, உயிரும் தன் இயல்பாகிய அறியும் திறனால் பிறபொருள்களை விட்டு விலகும்.

364. சுண்ணாம்பின் தன்மையால் சுவர் வெண்மையாதல் போன்று உயிரும் தன் நற்காட்சியால் பிற பொருள்களின் இயல்புகளை அறியும்.

365. அவ்வாறு உலக வழக்கில் பல எடுத்துக் காட்டுகளின் மூலம் நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கத்தின் இயல்பு கூறப்படும்.

366. நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மூன்றும் உயிரற்ற பொருள்களில் இல்லை.



**356.** **சுவராக மாறாதே சுண்ணாம்பு ஞானி**
**தவறாக எண்ணான் பொருள்**

**357.** **சுண்ணாம்பு தன் குணத்தில் நிற்றல்போல் ஞானியர்**
**தன்இயல்பில் நிற்பர் நிலைத்து**

**358.** **சுண்ணாம்பு தன்குணத்தில் நிற்றல்போல் நற்சீலர்**
**தன்இயல்பில் நிற்பர் நிலைத்து**

**359.** **சுண்ணாம்பு தன்குணத்தில் நிற்றல்போல் காட்சியர்**
**தன்இயல்பில் நிற்பர் நிலைத்து**

**360.** **சொல்லிய மூன்றுமே நிச்சய நோக்கினி**
**சொல்வோம் உலகியல் நோக்கு**

**361.** **சுண்ணாம் பினால்சுவர் வெண்மையாம் மன்னுயிரும்**
**தான்அறிதல் செய்யும் பொருள்**

**362.** **சுண்ணாம் பினால்சுவர் வெண்மையாம் தன்இயல்பால்**
**பார்க்கும் பிறவே உயிர்**

**363.** **சுண்ணாம் பினால்சுவர் வெண்மையாம் மன்னுயிரும்**
**தன்இயல்பால் நீக்கும் பிற**

**364.** **சுண்ணாம் பினால்சுவர் வெண்மையாம் மன்னுயிரும்**
**தானறியும் பல்பொருட் பண்பு**

**365.** **காட்சி யறிவுசீலம் தம்மின் இயல்பினைக்**
**காட்டும் உலக வழக்கு**

**366.** **காட்சி யறிவுசீலம் மூன்றும் உயிரிலா**
**வேற்றுப் பொருளினில் இல்**

367. உயிரற்ற வினைகளில் மும்மணி இல்லை யாதலால், உயிரால் வினைகளில் அழிவு என்ன செய்ய முடியும்.

368. உயிரற்ற உடலில் மும்மணி இல்லையாதலால் உயிரால் அவ்வுடலில் அழிவென்ன செய்ய முடியும்?

369. உயிரால் அழிக்கப்பட காட்சி, ஞான ஒழுக்கங்கள் உயிரற்ற பொருள்களில் இல்லை என்றுதான் கூறப்பட்டதே ஒழிய, பொருள்களின் அழிவு பற்றிக் கூறப்படவில்லை.

370. உயிரின் குணம் உயிரற்ற வேறு எப்பொருளிலும் இல்லை. எனவே நற்காட்சி பெற்றவனிடம் பிற பொருள்கள் மீது மயக்கமோ விருப்பமோ எழுதல் இல்லை.

371. ஆசை, விருப்பு, வெறுப்பு முதலானவை உயிரில் தான் உண்டே யொழிய பிறவற்றில் இல்லை.

372. ஒருபொருள் வேறு ஒரு பொருளின் குணத்தை யாக்குவதில்லை. ஒவ்வொரு பொருளும் தத்தம் பண்பிலேயே உள்ளது.

373. உயிரில் புத்கல வினையின் கலப்பு ஏற்படுவதால், புகழ்ச்சி, இகழ்ச்சியான சொற்களும் அதன் விளைவாக சினம் முதலான திரிபுணர்வுகளும் தோன்றுகின்றன.

374 . சொற்கள் புத்கலங்களேயாகும். புத்கலங்கள் உயிரினுடையவையாகா. எனவே சினம் கொள்ளுதல் ஏன் என்று சிந்திக்க வேண்டும்.

375. தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர், எச்சொற்களையுமே தன் காதில் வாங்குவதில்லை.

376. தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர் எந்தப் பொருளையும் தன் கண்களால் காண்பதில்லை.

377 தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர் எந்தவொரு வாசனையையும் தம் மூக்கில் நுகர்வதில்லை.



**367. உயிரில் வினைகளில் மும்மணி உண்டோ?**
**உயிர்தான் அழித்தலுண் டோ?**

**368. உயிரில் உடல்தன்னில் மும்மணி உண்டோ?**
**உயிர்தான் அழித்தலுண் டோ?**

**369. காட்சி அறிவுசீலம் தான்அழி யாதென்றோம்**
**வீழ்ச்சி உடைத்தே பொருள்.**

**370. உயிர்ப்பண்பே வேறொன்றில் இல்லையே காட்சி**
**மயக்கம் விருப்பம் இலது**

**371. மோகம் விருப்புவெறுப் பெல்லாம் உயிரில்தான்**
**ஆகும் பிறபொருளில் இல்**

**372. எப்பொருளும் வேறொன்றின் பண்பினை யாக்காதே**
**அப்பொருள் தத்தம் இயல்பு**

**373. புத்கலச் சேர்வால் புகழ்ச்சி இகழ்ச்சியாம்**
**அத்தன்மை யாக்கும் சினம்**

**374. சொற்களே புத்கலம் தாம்உன தல்லவே**
**உற்றசினம் உன்னில் எதற்கு?**

**375. தன்னில்தான் தோயுமுயிர் எந்தவோர் சொல்லுமே**
**தன்செவி கேட்பதில்லை யே**

**376. தன்னில்தான் தோயுமுயிர் எந்த உருவையும்**
**தன்விழி காண்பதில்லை யே**

**377. தன்னில்தான் தோயுமுயிர் எந்தவோர் வாசமும்**
**தன்மூக் கிழுப்பதில்லை யே**

378. தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர் எந்தவொரு சுவையையும் தன் நாவால் சுவைப்பதில்லை.

379. தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர் தன் உடலால் எந்தவொரு பொருளையும் தொட்டறிவதில்லை.

380. தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர் தன்மனத்தில் பல்வகைப் பண்புகளாலான பொருட்களை எண்ணுவதில்லை.

381. தன்னில் முழுமையாகத் தோயும் ஒருயிர் பல்பொருட் பண்பினைத் தன் மனத்தால் எண்ணுவதில்லை.

382. அறிவிலிகள், பல்வகையான பொருள்களையும் அவற்றின் குணங்களையும் அறிந்திருந்தும், மனம் நிறைவு பெறுவதில்லை. நல்லறிவு பெறுவதில்லை : அமைதி உறுவதில்லை.

383. முன்வினைப்பயன் உணர்ந்து விலகியுள்ளோர், தம் குற்றங்களுக்காக மனம் வருந்துவர்.

384. இனிவரும் காலத்தில், இருவினைக் கட்டுறா வண்ணம், நெஞ்சில் உறுதி பூண்டு நல்விரதங்களை ஏற்பர்.

385. ஒவ்வொரு கணமும் வினைக்கட்டு நிகழ்ந்து கொண்டே தான் உள்ளது என்பதை அறிவன் அறிந்து, போக்குதல் செய்வான். அத்தகையோன் தன் குற்றம் களையும் பண்பினன் ஆவான்.

386. குற்றங்களுக்காக வருந்துதல், குற்றங்களை நீக்குதல், நல்விரதங்களை ஏற்றல் ஆகிய மூன்றும் நல்லொழுக்க நெறியாகும்.

387. வினைகள் என்னுடையவை என்று கருதினால், அவ்வுயிரிடம் மீண்டும் எண்வினை ஊற்று உண்டாகும்.

388. வினைகள் என்னால் ஏற்பட்டன என்று கருதும் போதும் எண்வினை வரவு தொடரும். அவ்வெண்ணம் மீண்டும் துன்ப வினைக்கே விதையாகும்.



**378. தன்னில்தான் தோயுமுயிர் எந்தச் சுவையும்தான்**
**தன்நா சுவைப்பதில்லை யே**

**379. தன்னில்தான் தோயுமுயிர் மேவும் தொடுவுணர்வே**
**தன்உடல் கொள்ளாது காண்**

**380. தன்னில்தான் தோயுமுயிர் பண்புடைப் பல்பொருள்**
**தன்மனம் கொள்ளாது காண்**

**381. தன்னில்தான் தோயுமுயிர் பல்பொருட் பண்பினைத்**
**தன்மனம் கொள்ளாது காண்**

**382. பல்பொருள் பண்பறிந்தும் மூடர் நிறைவடையார்**
**நல்லறி வெய்தார் நலிந்து**

**383. முன்வினை தாம்விலகி நின்றார் பிழையுணர்ந்தார்**
**தன்மனம் தான்வருந்து வர்**

**384. வரும்நாள் இருவினைக் கட்டுறா நெஞ்சின்**
**உறுதியே நல்விரத மாம்**

**385. கணந்தோறும் தோன்றிடும் கட்டறிந்து போக்கல்**
**குணவான்தன் குற்றநீக்க லாம்**

**386. வருந்துதல் நல்விரதம் குற்றநீக்கம் மூன்றும்**
**பொருந்துதல் நற்சீல மாம்**

**387. தன்னுடைத்தே வல்வினை என்றெண் ணிடினாங்கே**
**எண்வினை மீண்டும் வரவு**

**388. தன்னால் வினைப்பயன் என்றெண்ணல் மீண்டுந்தான்**
**எண்வினைத் துன்ப விதைப்பு**

389. இன்ப துன்பங்கள் தன்னுடையவை என்றெண்ணித் துய்க்கும் உயிரிடத்து, மீண்டும் எண்வினைக் கட்டு ஏற்படும்.

390. நூல்களும் உயிரற்றவையே. எனவே அவை எதையும் அறிவதில்லை. நூல்களும் நல்லறிவும் வேறு வேறே என்றான் ஜினபகவான்.

391. சொற்கள் புத்கலத்தின் ஆக்கம். எனவே சொற்கள் எதையும் அறியா.

392. உருவம் புத்கலத்தின் பண்பேயாகும். எனவே உருவங்கள் அறிவுடையவை அல்லனவே!

393. நிறங்கள் புத்கலத்தின் பண்பே. எனவே நிறங்கள் அறிவுடையனவல்ல.

394. நாற்றம் புத்கலத்தின் பண்பே. எனவே நாற்றமும் அறிவுப்பண்பினை உடையது அல்ல.

395. சுவையும் புத்கலத்தின் குணமே: எனவே சுவையும் அறிவுத்திறன் உடையது அல்ல.

396. தொடுதலும் உடலின் செயலாகும்: எனவே அதுவும் அறிவாகாது.

397. வினைகள் புத்கலங்களே. எனவே வினைகளும் அறிதல் திறனற்றவையே.

398. தன்மப் பொருள் உயிரற்றதேயாகும். எனவே அதுவும் அறிதல் பண்பற்றதே.

399. அதன்மப் பொருளும் உயிரற்றதே: எனவே அதுவும் அறிதல் பண்பற்றதே.

400. காலமும் எதையும் அறிவதில்லை. ஏன் எனில் காலம் என்னும் பொருளும் உயிர் அற்றதே.



**389.** **துய்க்கும் உயிரிடத்தே இன்பதுன்பம் மீண்டுந்தான்**
**உய்க்கும் வினையெட்டின் கட்டு**

**390.** **நூல்கள் எதையும் அறியா தெனவேஅந்**
**நூல்கள் அறிவாதல் இல்**

**391.** **சொற்கள் எதையும் அறியா தெனவேஅச்**
**சொற்கள் அறிவின் பிற**

**392.** **உருவம் எதையும் அறியா தெனவே**
**வுருவம் அறிவின் பிற**

**393.** **நிறங்கள் எதையும் அறியா தெனவே**
**நிறங்கள் அறிவின் பிற**

**394.** **நாற்றம் எதையும் அறியா தெனவேஅந்**
**நாற்றம் அறிவின் பிற**

**395.** **சுவைதான் எதையும் அறியா தெனவே**
**சுவைதான் அறிவின் பிற**

**396.** **தொடுதல் எதையும் அறியா தெனவே**
**தொடுதல் அறிவின் பிற**

**397.** **வினைகள் எதையும் அறியா எனவே**
**வினைகள் அறிவின் பிற**

**398.** **தன்மம் எதையும் அறியா எனவேஅத்**
